# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 394

சனி, 06 ஜூன், 2026 |

பக்கங்கள் 15

www.ilakku.org













# சொல்லிசைப் பாடகர் சங்கீதன் கைது

ஈழத் தமிழர் அரசியல் மற்றும் சமூக விடயங்களை மையமாகக் கொண்டு பாடல்களை வெளியிட்டு வந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீதன் கடந்த 4ஆம் நாளன்று கைது செய்யப்பட்டுள்ளார். நாவற்குழியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட நிலையில் சங்கீதன் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய பாடல்களை தன்னுடைய சமூகவலைத்தளங்களில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கில் இவ்வாறு செயற்பட்டதாக தெரிவிக்கப்பட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர், 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சங்கீதனின் கைது செய்தி வெளியாகியதையடுத்து சமூக ஊடகங்களிலும், கலை மற்றும் இலக்கிய வட்டாரங்களிலும் பரவலான கவலை எழுந்துள்ளது. பலரும் அவரது உடனடி விடுதலையை வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக தென்னிலங்கை சிங்கள கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் அமைப்புக்களும் இவரது கைதிற்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.




தொடர்ச்சி: பக்கம் 11

## அரசின் வருமானத்தை உயர்த்த பொதுமக்களிடமிருந்து யோசனை கோரல்!

அரசின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% ஆக உயர்த்துவதற்கான நடுத்தர மற்றும் நீண்ட கால இலக்கை எட்டும் நோக்கில் பொருத்தமான யோசனைகள், கொள்கை பரிந்துரைகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வருமான முகாமைத்துவ குழுவினால் விடுக்கப்பட்டுள்ள பகிரங்க அறிவித்தலில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த குழுவுக்கு, நாட்டின் அறிஞர்கள், தொழில்முறை நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் இலங்கைப் பிரஜைகள் எவரும் தங்களது பங்களிப்புகளை வழங்க முடியும்.

குறிப்பாக, முறைசாரா பொருளாதாரத்தை முறைப்படுத்துதல், வரி அடிப்படையை விரிவுபடுத்துதல், வருவாய் ஈட்டும் நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கல், தானாக முன்வந்து வரி செலுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் தரவு பகுப்பாய்வு அடிப்படையிலான

தொடர்ச்சி: பக்கம் 12

## வலி வடக்கில் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடரும் போராட்டம்!

யாழ்ப்பாணம் - வலி வடக்கு, மயிலிட்டி பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணி உரிமையாளர்களினால் இராணுவத்தினரின் "கொமோண்டோ " பங்களா முன்பாக ஏழாவது வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



மக்களால் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இடம்பெற்ற கவனயீர்ப்பு நடவடிக்கையில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ச்சி: பக்கம் 12

# காசாவில் 9,500க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காணாமல் போயுள்ளனர்



அக்டோபர் 2023-ல் இஸ்ரேலின் இனப்படுகொலைப் போர் தொடங்கியதிலிருந்து, காசா பகுதியில் 9,500க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காணாமல் போயுள்ளனர் என்று ஒரு மனித உரிமை அமைப்பு கூறுகிறது. காணாமல் போனவர்களில் சுமார் 4,700 பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் என்று காசாவைத் தளமாகக் கொண்ட அல்-மீசர் மனித உரிமைகள் சங்கம் என்ற அரசு சாரா அமைப்பு தெரிவித்துள்ளது.

இடிக்கப்பட்ட கட்டிடங்களின் பெரும் இடிபாடுகளுக்கு அடியில் சுமார் 8,100 பேர் சிக்கியிருப்பதாக நம்பப்படுவதாக அந்த அமைப்பு ஒரு அறிக்கையில் கூறியுள்ளது. மேலும், உதவிப் பொருட்கள் விநியோக மையங்களுக்கு அருகே 250 பாலஸ்தீனியர்கள் காணாமல் போயுள்ளனர், அதே நேரத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மக்களை வெளியேற்றும் போது 800க்கும் மேற்பட்டோர் இஸ்ரேலிய இராணுவ சோதனைச் சாவடிகளில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அக்டோபர் 7, 2023 அன்று இஸ்ரேலுக்குள் நுழைந்த 350 நபர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது. "தொடர்ந்து நடைபெற்று வரும் போரின் விளைவாக ஏற்பட்ட மிகவும் சிக்கலான மற்றும் வேதனையான மனிதாபிமான நெருக்கடிகளில் இதுவும் ஒன்றாகும்," என்று கூறிய அல்-தமீர், கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவது மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி: பக்கம் 13

## பிரித்தானியா ஏற்படுத்திய பிரச்சனையை தீர்க்க அவர்கள் வரவேண்டும் - நேபாளப் பிரதமர்



நேபாளப் பிரதமர் பாலன் ஷா, தனது நாட்டிற்கும் அதன் பெரிய தெற்கு அண்டை நாடான இந்தியாவிற்கும் இடையிலான நீண்டகால எல்லைப் பிரச்சினையை மீண்டும் கிளறியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையில் ஐக்கிய இராச்சியமும் சீனாவும் பங்கேற்க வேண்டும் என்று கூறியதன் மூலம், அவர் இந்தப் பிரச்சினைக்கு மேலும் தீயை மூட்டியுள்ளார்.

நாடு முழுவதும் பரவிய ஊழலுக்கு எதிரான மாபெரும் 'ஜென் Z' தலைமுறைப் போராட்டங்களைத் தொடர்ந்து கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஷா, ஞாயிற்றுக்கிழமை அன்று, "இந்தியா நேபாளத்தின் நிலத்தை ஆக்கிரமித்தது மட்டுமல்லாமல், நேபாளமும் பல இடங்களில் இந்தியாவின் நிலத்தை ஆக்கிரமித்துள்ளது" என இந்த வாரம் ஆர்.ரி ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுப்பதில் அவர் சமரசப் போக்கைக் காட்டிய அதே வேளையில், காத்மாண்டு இந்தப் பிரச்சினை குறித்து இந்தியா மற்றும் சீனாவுடன் மட்டுமல்லாமல் (சர்ச்சைக்குரிய பகுதியை ஒட்டியிருக்கும் சீனாவின் திபெத் பிராந்தியம்), ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துடனும் பேசியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

"பிரிட்டிஷார் இப்பகுதியை விட்டு வெளியேறிய காலத்திலிருந்தே இந்தப் பிரச்சினை இருப்பதால், ஐக்கிய இராச்சியமும் இதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே எங்கள் கருத்து," என்று ஷா கூறினார். 1947-ல் இந்தியா சுதந்திரம் அடையும் வரை, பிரிட்டன் கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் இந்தியாவை ஆண்டது. அதன் கொடூரம் மற்றும் சுரண்டலுக்காக, குறிப்பாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த பகுதிகளை இந்தியா மற்றும் பாகிஸ்தானாகப் பிரித்ததற்காக, அது இன்றும் கசப்புடன் நினைவுகூரப்படுகிறது.

"பிரிட்டிஷ் மற்றும் நேபாளத்திற்கு இடையேயான 1816 ஒப்பந்தத்தில் இருந்த தெளிவின்மையால்தான் இந்தப் பிரச்சினை முழுவதுமாக எழுந்தது," என்று புது தில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வுகள் பள்ளியின் கௌரவப் பேராசிரியர் எஸ்.டி. முனி கூறினார்.

## இந்தோனேசியாவின் பொருளாதாரம் சரிகின்றது




அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகளுக்கு மத்தியில், இந்தோனேசியாவின் ரூபியா அமெரிக்க டொலருக்கு எதிராக இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் பலவீனமான நிலையை எட்டியுள்ளது. இது 18,000 என்ற உளவியல் ரீதியான வரம்பைத் தாண்டியுள்ளது.

சமீபத்தில் மத்திய வங்கிகள் ஆதரவளிக்க முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், வியாழக்கிழமையன்று(4) இந்த நாணயம் அமெரிக்க டொலருக்கு எதிராக 18,028 என்ற நிலையை அடைந்தது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் போரினால் ஏற்பட்ட எரிசக்தி நெருக்கடி, எரிசக்தியை இறக்குமதி செய்யும் தென்கிழக்கு ஆசியப் பொருளாதாரங்கள்,

தொடர்ச்சி: பக்கம் 11

## செயற்கை நுண்ணறிவால் புற்றுநோய்க்கு சிகிச்சை



ரஷ்யாவின் தனிப்பயனாக்கப்பட்ட புற்றுநோய் தடுப்பூசி திட்டத்திற்காக தற்போது 40-க்கும் மேற்பட்ட நோயாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முதல் சிகிச்சைகளே ஏற்கெனவே வலுவான நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்கி வருகின்றன என்று ரஷ்ய கூட்டாட்சி மருத்துவ-உயிரியல் முகமையின் தலைவரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான வெரோனிகா ஸ்க்வோர்ட்சோவா, புதன்கிழமை(3) தெரிவித்தார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றம் 2026-ன் ஒரு பகுதியாகப் பேசிய ஸ்க்வோர்ட்சோவா, இந்த சிகிச்சையானது புற்றுநோய்க்கு எதிரான ஒரு முக்கிய ஆயுதமாக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறது என்று கூறினார்.

இந்தத் தடுப்பூசி ஒவ்வொரு நோயாளிக்கும் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுகிறது. இந்தச் செயல்முறைக்கு சுமார் 42 நாட்கள் ஆகும். விஞ்ஞானிகள் ஒரு நபரின் கட்டி

தொடர்ச்சி: பக்கம் 12

# தியாகி பொன் சிவகுமாரின் 52வது, வது ஆண்டு நினைவு

-பா.அரியநேத்திரன்-



தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது மாணவப் பருவத்திலேயே ஆயுதப் போராட் டத்தை ஆரம்பித்து முதல் வீரச்சாவைத் தழு விக் கொண்ட முதல் மாவீரன் தியாகி பொன் சிவகுமாரன்.

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் விடு தலையைப் பெற முடியாது. ஆயுதப் போராட்டமே விடுதலையைப் பெற் றுத் தரும் என்று திடமாக நம்பி அந்த வழியி லேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர் தான் எங்கள் சிவகுமாரன்.

எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற் காகவே தியாகி சிவகுமாரன் அவர்கள் தன்னை அழித்துக்கொண் டார்.

பொன்னுத்துரை சிவகுமாரன் 1950,ஆகஷ்ட்,26, ல் பொன் னுத்துரை, அன்னலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது மகவாக சிவகுமாரன் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்உயர்கல்வி கற்றவர். அந்தக் காலகட்டத்தில்தான் இலங்கையில் கல்வித் தரப்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப் பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார். 1970களின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சோமவீர சந்திரசிறீயின் வாகனத்துக்கு குண்டு வைத்தவர் சிவகுமாரன் என்று குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்ப ட்டார்.

அல்பிரட் துரையப்பாவுக்கு குறிவைத்தவர்:

1971 ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாண நகரத் தந்தையாகவும் அப்போது சிறிமா கட்சியின் அமைப்பாளராகவும்

**தொடர்ச்சி: பக்கம் 13**

# அநுர அரசாங்கம் ஏமாற்றி விட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார தொண்டர்கள் போராட்டம்




கடந்த பலவருடங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் சுகாதார தொண்டர்களாக சேவையாற்றி வரும் நிலையில் தம்மை அநுர அரசு திட்டமிட்டு ஏமாற்றிவிட்டதாகவும், இன்றைய தினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையை இடை நிறுத்தி தமக்கான வாய்ப்பை வழங்கவேண்டும் என கோரி தொண்டர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ. போதனா வைத்தியசாலை முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போராட்டத்தினை தொடர்ந்து, அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை பேரணி யாக சென்று, போராட்டத்தை நிறைவு செய்தனர்.

கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலையான ஊதியம் கூட கிடைக்காது இந்த சேவையை மேற்கொண்டு வந்தோம். இது தொடர்பில் கொழும்பில் துறைசார் அமைச்சரை சந்தித்து கலந்து ரையாடிய போது, புதிய நியமனம் வழங்கும் போது, தற்போது தற்காலிகமாக சேவையில் இருக்கும் 120 பேருக்கும் சேவையின் அடிப்படையில் உள்வாங்குவதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

ஆனால் தற்போது வாக்குறுதி போலியாகிவிட்டது. நாளை நடைபெறவுள்ள நேர்முக தேர்வுக்கு 92 பேர் அழைக்கப் பட்டுள்ள நிலையில் சேவையில் இருந்த 15 பேரே அதில் உள்

**தொடர்ச்சி: பக்கம் 13**

# ஆசிரியர் தலையங்கம் | 06 ஜூன், 2026

## பாடவும் ஆடவும் எழுதவும் கருத்துச்சுதந்திரமில்லையென வெளிப்படையாகவே ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்கும் அநுர ஆட்சி

தனது தேசிய மக்கள் சக்தி ஆட்சி, மாற்றத்துக்கான ஆட்சி என்று ஈழத்தமிழர் தாயகத்தில் தேர்தல் காலங்களில் உறுதி கூறி வாக்குப்பெற்று பதவிக்கு வந்த சிறிலங்காவின் இன்றைய அரசத்தலைவர் அநுரகுமார திசநாயக்காவின் ஆட்சியில் என்ன நடக்கிறது?

கிளிநொச்சியில் கலைவிழாவில் பாடிய இளையவர் கைது. உரும்பிராயில் கோயிலில் பாடிய தாயகத்தின் பெருங்கலைஞர் சாந்தனின் மக்கள் இருவரும் கைது இருதேசமென்ற உண்மையை எழுதியதற்காக தீபச்செல்வனின் நூல்கள் இரண்டு தடுத்துவைப்பு மொத்தத்தில் அநுர ஆட்சியில் ஈழத்தமிழர் பாடவும் ஆடவும் எழுதவும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் கருத்துச்சுதந்திரமற்றவர்களாக வெளிப்படையாகவே வாழ்வது தெரிகின்ற பொழுது ஈழத்தமிழர் இறைமையை அநுர ஆட்சி ஒடுக்குகிறது என்பது தெளிவாகிறது என்பதை இலக்கு இவ்வாரத்தில் உலகின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறது.

இளையவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படும் நிலை அவர்களுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தக் கூடியது. இதனால் அவர்கள் எந்த எதிர்வினை செய்தாலும் அவர்களை சிறிலங்கா பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைதாக்கி அவர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கக் கூடிய அபாயம் உள்ளதால் ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழர்கள் காலனித்துவத்தால் தங்கள் தன்னாட்சி உரிமையைப்பயன்படுத்தி தங்களுக்கான பாதுகாப்புடன் கூடிய அமைதிவாழ்வை வளர்ச்சிகளை நிர்ணயிக்கும் தன்னாட்சி உரிமையை நடைமுறைப்படுத்தாது உள்ளனர் என்ற உண்மையை ஏற்று அவர்கள் தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தி தங்களது அரசியல் எதிர்காலத்தை நியமிக்கும் வரை ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க சிறப்புப் பிரதிநிதியொருவரை பலஸ்தீன மக்களுக்கு நியமித்தது போல அனைத்துலகச் சட்டங்களின் கீழ் நியமிக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

மேலும் தீபச் செல்வனின் நூல்கள் தடுக்கப்பட்டு பலநாள் ஆகியும் கூட அதனை விடுவிக்க வைப்பதற்கான எந்தவொரு அக்கறையுமற்றவர்களாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் வாழ்வை முன்னெடுக்கிறார்கள். 1799இல் பிரித்தானிய காலனித்துவ அரசின் இலங்கைக்கான முதல் செயலாளராகப் பதவியேற்ற சேர். கியூ கிளேகோன் (Sir Hugh Cleghorn) ஈழத்தமிழர் இறைமையின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனி மதராசில் இருந்து இலங்கையையும் தமிழகத்தையும் ஆட்சி செய்த காலத்திலேயே இருதேசம் இலங்கையில் உண்டு என்று கூறி 1879 இல் அறிக்கையாகவும் ஆவணப்படுத்தினார்.

1857இல் வரையப்பட்ட யோண் அரோசிமித் வரைபடத்தில் இலங்கைத்தீவில் இரு தேசங்களாக வடக்கு கிழக்கு தமிழர் தேசமாகவும் தென்மேற்கும் மத்திய பகுதிகளும் சிங்களவர்களின் தேசமாகவும் தெளிவான வேறுபடுத்தலுடன் வரையப்பட்டதே. இவ்வாறு பல வெளிநாட்டவர்களின் நூல்கள் இலங்கையை இருதேசங்களின் தீவாக அறிவூட்டுகையில் தீபச்செல்வனின் நூலை எந்த நியாயப்படுத்தலின் கீழ் தடைசெய்யலாம். இவற்றை சுட்டிக்காட்டி வாதாடாது ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் சட்டத்தரணிகள் இருப்பதுதான் சிறிலங்கா அரசாங்கம் தான் நினைத்த மாதிரி எல்லாம் ஈழத்தமிழர்களை நடாத்தலாமென்னும் துணிவுக்கு வருவதற்கு மூலகாரணம் என்பதையும் இலக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அதே நேரத்தில் தீபச் செல்வனின் விடயத்தில் அவரது இழப்பை ஈடுசெய்யக் கூடிய உதவிகளைத்தானும் உலகத் தமிழர்களும் செய்யாது இருப்பதும் உலக ஈழத்தமிழரிடையிலும் செயற்திறன் உடன் செயற்திட்டங்கள் வழி செயற்பட இயலாத நிலை தொடர்வதையே உணர்த்துகிறது என்பதையும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

அவ்வாறே ஈழத்தமிழரின் சமூக ஊடகங்கள் வலைத்தளங்கள் எப்பொழுதும் மக்களின் பிரச்சினைகள் மக்களின் தேவைகள் மக்களின் பாதிப்புக்களுக்கு குரல்கொடுத்தல் காட்சிப்படுத்தல் இன்றி பொறுப்பற்ற முறையில் ஒருவரையொருவர் திட்டித் தீர்த்தலால் தமக்கு பணமும் புகழும் தேடும் நோக்கையே தமது போக்காகக் கொண்டு திகழ்வதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது. அத்துடன் குறைபேசு தளமாகவே தம்மை மாற்றிக் கொண்ட சமுக ஊடகங்கள் வலைத்தளங்கள் தமது விருப்பு வெறுப்பை ஊடகத்தில் கொட்டித்தீர்த்து ஒழுங்காகச் செயற்படும் நிறுவனங்களையும் முறிவடைய வைக்கும் கைங்கரியத்திலும் நன்கு பெருவளர்ச்சி பெற்று வருகின்றன. இதனால் ஊடகப்பணி என்பது வாழ்நாள் பொறுப்புள்ள பணி என்பதனை ஏற்படும் உள்ளக்கிளர்ச்சியில் ஊடகவியலாளர்களையே மறக்க வைக்கும் ஆற்றல் உள்ளனவாக இந்த சமுகப் பொறுப்பற்ற சமுக ஊடகங்கள் தம்மை வளர்த்துக்கொண்டுள்ளன என்பது வேதனையான உண்மை என்பதையும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது. விமர்சனம் என்னும் வடசொல்லுக்கு பரீட்சித்தல் என்பதே பொருள்.

ஒருவர் தனக்குள்ள அறிவு தனக்குள்ள அனுபவம் குறித்து படைப்பை பரீட்சித்தல் என்பதே சிறந்த விமர்சனமாகும். திறனாய்வு என்பது அந்தப்படைப்பில் உள்ள திறனை ஆய்வு செய்தல் என்று பொருள். நான் நினைக்கிறேன் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று சொல்கிற தொல்காப்பிய நெறிப்படுத்தலிலும் ஒன்றில் உள்ள உயர்ந்ததையே நாம் வெளிக்கொண்டு வருகின்ற போது சமுகம் உயர்வானதாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளும் என்கின்ற கருத்து உள்ளது. உண்மையில் தமிழர் என்று தன்னைச் சொல்லிக் கொள்பவன் தமிழின் அடிப்படையான யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பதில் எல்லா ஊரும் மனிதர் வாழவல்ல ஊர்களே எல்லாமனிதரும் நாம் மனிதர் என்ற வகையில் நம் உறவினர் என்ற உண்மையைத் தெரிவிக்கிறது. அப்பொழுதுதான் மனித சமத்துவம் தமிழர்க்கான தமிழின் முதல் அழைப்பாக உள்ளதென்பது தெளிவாகும். அவ்வாறே 'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்கின்ற அடிப்படை உண்மையையும் தமிழர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அறிவுள்ளவன் பகுத்தறிவுத்தன்மையே இதற்குக் காரணம். நான் செய்கிற செயலுக்கு நானே பொறுப் பேற்றுக்கொள்வதே ஏற்புடையது. அதனை விடுத்து அடுத்தவனைத் திட்டித்தீர்ப்பது என்பது தமிழ்மரபல்ல. இதனால்தான் பெரியோரென வியத்தலுமிலமே, சிறியோரென இகழ்தலும் இலமே என்கிற வரியும் மனிதரை பெரியவர் இகழ்வானவர் என வகைப்படுத்தல் என்பதே அனைத்து மனிதசமத்துவமின்மைக்கும் அடிப்படைக்காரணம் என்பதை நெஞ்சிருத்தி அதனை விலத்தப்பழக்குகிறது. இதனால் அவரவருக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள் அவரவரது அறிவாக அனுபவமாக மாறுகிறது. ஆதலால் ஒரு நிகழ்வுக்குரிய காரணத்தை அறிய முற்படுதல்தான் உண்மையான பகுப்பாய்வு என்பதைக் கருத்தில் வைத்து, ஆளை வைச்சுவாங்காமல் அந்த காரணத்தைக்கண்டறிந்து அதனை மாற்றுவதா ஏற்பதா என்ற வகையில் திறனாய்வுகளைச் செய்தல் சமுகத்துக்கு நலமளிக்கும்.

மேலும் கழிந்த காலம்தான் தமிழில் உள்ளதே தவிர இறந்த காலமில்லை. ஆதலால் ஒருநிகழ்வு நிகழ்ந்து விட்டால் அதனையே திருப்பித் திருப்பி பேசி மகிழ்வது அல்லது புலம்புவது என்ற போக்கை விட்டு விலகி அதனை அனுபவமாகக் கொண்டு நிகழ்காலத்துக்கான பலமாக அதனை மாற்றி செயற்படத் தொடங்கினாலே எதிர்காலத்தைப் புதுமையுடன் எதிர்கொண்டு காலத்திற்கு ஏற்ப இடத்துக்கேற்ப வாழும் ஆற்றலைப் பெறலாம். உதாரணமாக இன்று ட்ரம்பின் கூற்றுக்களைக் கொண்டு எந்த எதிர்வு கூறலையும் கூறஇயலாது என மேற்குலக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் அமெரிக்காவை மீளவும் பெரிய அமெரிக்காவாக மாற்றுவேன் என அவர் கடந்த காலத்தை உயர்வாகக் காட்டி நிகழ்காலத்தைக் கட்டமைக்க முயல்கின்றாரே தவிர நிகழ்காலத்தின் மாற்றங்களை உள்வாங்கி எதிர்காலத்தை அணுகும் முறையில் செயற்பட மறுக்கிறார். இதே நிலைதான் தமிழ் அரசியலிலும் உள்ளது. அவர் வல்லரசின் அரசத்தலைவர் என்பதால் மீளவும் புத்துயிர் பெறுகின்றார். ஆனால் ஈழத்தமிழர்கள் அரசற்ற தேசஇனமென்பதால் மீள்புத்துயிர்ப்பைத் தாங்களே முன்னெடுக்க வேண்டிய கஷ்டமான நிலையில் உள்ளனர். மக்கள் இறைமையைக் கொண்டே இதனைச் செய்ய வேண்டியிருப்பதால் தேசிய ஒருமைப்பாடு ஈழத்தமிழரின் விடுதலைக்கான தலையாய நிபந்தனையாக அமைகிறது. ஆனால் ஈழத்தமிழர்கள் செயற்திட்டங்களைச் செயற் படுத்தாது வெற்றுப் பேச்சுக்களால் தாங்களே தங்களின் தேசிய ஒருமைப்பாட்டைச் சிதறடித்து வருகின்றனர் என்பதை இலக்கு வேதனையுடன் வெளிப்படுத்த விரும்புகிறது.

அத்துடன் இன்றைய முதலாளித்துவத்திற்குப் பின்னான நவீன உலகின் அரசியல் நிலப்பரப்புக்கள் ஒருதுருவ அல்லது இருதுருவ முனைவாக்கத்தில் இருந்து பன்துருவ முனைவாக்கம் (Multipolarity) நோக்கி, பொருளாதார தேசியவாதத்துக்கு உச்சமளித்தல் (heightened economic nationalism) என்பதனைத் தமது தலைமை பண்பாகக் கொண்டு காணப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் இன்றைய உலகின் மூன்று முக்கியதன்மைகளான உலகமயமாக்கல் (globalisation) செயற்கை நுண்ணறிவு இணைப்புடன் கூடிய தொழில்நுட்பம், காலநிலை மாற் றம் என்பவற்றுடன் ஆழமான கருத்தியல் மற்றும் கொள்கைசார் பிளவுகள் உள்ளனவாக உள்ளன. நிலவுகிற ஒரு பொதுவான எண்ணத்துடன் இணையாது நாடுகள் பல்வேறு போட்டித்தன்மைகளையும் ஒன்றுடன் ஒன்று மேற்கவிப்புக்கொண்ட அரசியல் தத்துவங்களையும் கொண்ட சிக்கலான புதிய உலக அரசியல் ஒழுங்குமுறையை தோற்றுவித்துள்ளன.

சமகால உலகில் ஒவ்வொரு நாட்டின் அரசாங்கங்களும் தமது பொருளாதார பாதுகாப்பியலை (Protection-ism) மையப்படுத்தியே மக்களைக் கவரும் கொள்கைகளையும் (Populism) தேசியவாதக்கொள்கைகளையும் (Na-tionalism) உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. இதனால் சுதந்திர வர்த்தகம் குறித்த ஒருமித்த பொதுக்கருத்திசைவு பாதிப்புற்றுள்ளது. உள்ளூர் உற்பத்திகளுக்கே ஊக்கஉதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. வர்த்தக அசைவுகள் எல்லாமே தாயக பொருளாதாரத்தை மீளமைத்தல் ( reshoring) என்னும் நோக்கிலேயே இறக்குமதிப்பொருட்களுக்கு அதிக வரி விதிப்பு ஏற்றுமதிப்பொருட்களுக்கு வரிக்குறைப்புப் பேச்சுவார்த்தைகள் என்பனவற்றின் வழி நகர்கின்றன. இவற்றைக் கவனத்தில் கொண்டு இன்றைய உலக சமுக அரசியல் பொருளாதார எதார்த்த நிலைகளுக்கு ஏற்ப கருத்தரங்குகள் மாநாடுகள் வழியாக காலத்துக்கு ஏற்ற கொள்கை வகுப்புக்களைச் செய்து ஈழத்தமிழர்கள் சமகாலத் தில் அனைத்துலகத்துடனும் ஒப்புரவாகி இறைமையை தக்கவைக்க வழிவகுக்க வேண்டுமென்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**





# இலங்கையை சுற்றி பாதுகாப்பு வேலியமைக்கும் பூகோள சக்திகள்

**விதுரன்**

இந்தியப் பெருங்கடலின் மையப்பகுதியில் அமைந்துள்ள இலங்கைத்தீவு, வரலாற்று ரீதியாகவே சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாயப் பாதைகளின் சந்திப்புப் புள்ளியாக விளங்கி வருகிறது.

அண்மையக் காலங்களில் இலங்கையின் முப்படைகளுக்கும், பொலிஸாருக்கும் சர்வதேச நாடுகளிடமிருந்து தாராளமாக வந்திறங்கும் இராணுவத் தளவாடங்கள், வான்கலன்கள் மற்றும் வாகனக் கொடைகள் வெறும் 'நட்புறவு' சார்ந்த உதவிகள் அல்ல.



மாறாக, அவை தீவிரமடைந்து வரும் பூகோள அரசியல் போட்டியின் நேரடிப் பிரதிபலிப்பாகும். அவற்றுக்குப் பின்னால் தூரநோக்குடைய நிகழ்ச்சி நிரல்களும் இருக்கின்றன என்பதை மறுப்பதிற்கில்லை.

அமெரிக்கா, இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்பிற்குள் தத்தமது செல்வாக்கை நிலைநிறுத்த முற்படுவதை இக்கொடைகள் அப்பட்டமாக உணர்த்துகின்றன.

இலங்கைப் படைகளின் பலத்தை அதிகரிப்பதை விட, தமது சொந்தப் பிராந்தியப் பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதே இந்நாடுகளின் முதன்மை இலக்காகும்.

இலங்கைக்கு அண்மையில் கிடைத்த இராணுவ உதவிகளை உற்று நோக்கினால், ஒவ்வொரு நாட்டின் பின்னணியிலும் உள்ள மூலோபாய கணக்குகள் தெளிவாகப் புலப்படும்.



அவுஸ்திரேலியா இலங்கை கடலோரக் காவல் படைக்கு 12 அதிநவீன கண்காணிப்பு ட்ரோன் களை வழங்கியுள்ளது. மிரிஸ்ஸ கடலோரக் காவல்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு, அவுஸ்திரேலியாவின் நீண்டகால பாதுகாப்பு கவலையோடு தொடர்புடையது.

இறுதிக்கட்டப் போருக்குப் பின்னர், இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற சட்டவிரோத அகதிகள் படகுகள் அந்நாட்டுக்கு பெரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தின.



அவுஸ்திரேலியா கண்காணிக்க வேண்டிய 5500 கிலோமீற்றர் பரந்து விரிந்த கடற்பரப்பில் தனது சொந்தப் போர்க்கப்பல்களை நிறுத்துவதை விட, இலங்கை கடற்படையினதும் கடலோரக் காவல்படையினதும் கண்காணிப்புத் திறனை மேம்படுத்துவது அதற்கு செலவு குறைந்த உத்தியாகும்.

குறைந்த மனிதவளம் மற்றும் எரிபொருள் செலவில் அதிக பரப்பளவைக் கண்காணிக்க உதவும் இந்த ட்ரோன்கள், அவுஸ்திரேலியாவின் எல்லையை இலங்கைக் கடற்பரப்பிலேயே பாதுகாக்கும் ஒரு 'முன்னரங்கு வேலி' அமைப்பாகச் தொழிற்படுகின்றன.



மறுபுறம், அமெரிக்க கடலோரக் காவற்படையால் வழங்கப்பட்ட 'டெசிசிவ்' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், 'என்எல்என்எஸ் சமுத்ரவிஜய' (பி-628) என்ற பெயரில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் உத்தியோகபூர்வமாக கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பால்டிமோரிலிருந்து 78 நாட்கள் பயணித்து, 14,775 கடல் மைல்களைக் கடந்து இலங்கை கடற்படை வரலாற்றில் மிக நீண்ட பயணத்தை மேற்கொண்டு இக்கப்பல் வந்து சேர்ந்துள்ளது.

இதற்கு இணையாக, அமெரிக்க கடற்படையில் பயன்படுத்தப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட பத்து 'ரி.எச்-57 சீ ரேஞ்சர்' பலநோக்கு ஹெலிகொப்டர்களும் விமானப் படைக்கு வழங்கப்பட்டுள்ளன.

போர் நடைபெற்ற காலத்தில் கூட ஒரே தடவையில் இவ்வளவு எண்ணிக்கையிலான வான்கலன்கள் இலங்கைக்கு வந்ததில்லை. அமெரிக்காவின் நோக்கம் முற்றிலும் சர்வதேச கடல்சார் பாதைகளின் பாதுகாப்போடு தொடர்புடையது.

இலங்கைக்கு தெற்கே 12 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ள உலகளாவிய எரிபொருள் மற்றும் வர்த்தகப் பாதையைத் தனது கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதே அமெரிக்காவின் 'இந்தோ-பசுபிக் மூலோபாயத்தின்' முக்கிய அங்கமாகும்.

ஏற்கனவே வழங்கப்பட்ட சமுத்ர, கஜபாகு, விஜயபாகு கப்பல்களின் வரிசையில் சமுத்ரவிஜயவும் இணைந்திருப்பது, இலங்கை கடற்படையை அமெரிக்கத் தரநிலைகளுக்கு பழக்கப்படுத்துவதோடு, இவ்வாறான கொடைகளின் மூலம் இலங்கையின் பாதுகாப்பு கொள்கையைத் தன்வசப்படுத்த அமெரிக்கா முயல்வதைக் காட்டுகிறது.

கடல்சார் பாதுகாப்புக்கு அப்பால், இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பிலும் நிலைத்தன்மையிலும் இந்தியா தீவிர அக்கறை காட்டுகிறது.



அதனொரு பகுதியாக, வட மாகாண பொலிஸாரின் பயன்பாட்டிற்காக 300 மில்லியன் ரூபா பெறுமதியான 134 கப் வாகனங்களை இந்தியா கொடையாக வழங்கியுள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பில் ஏற்படும் எந்தவொரு தளம்பலும், இந்தியாவின் - குறிப்பாக தமிழ் நாட்டின் - சமூக, அரசியல் சூழலில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை புதுடில்லி நன்கறியும்.

போர்க்கால ஆயுதங்களை வழங்குவது இலங்கைக்குள் தேவையற்ற அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தலாம் என்பதால், பொலிஸ் மற்றும் சட்ட அமுலாக்கக் கட்டமைப்பை வலுப்படுத்தும் இத்தகைய சிவில்-பாதுகாப்பு உதவிகளை இந்தியா வழங்குகிறது. இதன் மூலம் வடக்கில் தனது மூலோபாய இருப்பை இந்தியா உறுதி செய்கிறது.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்குள் பூகோள சக்திகளின் ஊடுருவல் என்பது அண்மைக்கால நிகழ்வல்ல. முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போதும், அதற்குப் பின்னரும் சீனா, பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகள் ஆற்றிய பங்களிப்பு இன்றும் தொடர்கிறது.

உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கைக்கு பெருமளவிலான கனரக ஆயுதங்களையும், போர்க் கப்பல்களையும் தங்கு தடையின்றி வழங்கிய நாடு சீனா.

போரின் பின்னரும் இலங்கை கடற்படைக்கு 'பி-

தொடர்ச்சி: பக்கம் 11

 © 2026 இலக்கு இணையம்




பா.அரியநேத்திரன்

2026 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வலுவான வளர்ச்சியைக் காணக் கூடும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் வளங்களில் மனிதமூலதனத்தையும் நிதி மூலதனத்தையும் அதிக நலிவுக்குள்ளாக்கும் காரணிகளாக சமூகநலத்துறைச் செலவீனங்கள் இருந்து வருகின்றன. கடந்தகால போர் 2009, மே,18, ல் மௌனிக்கப்பட்டாலும் கடந்த 17, வருடங்களாக போரின் விளைவுகளால், வடக்கு கிழக்கில், பாதிப்படைந்தோர் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்விரு மாகாணங்களிலும் சமூக நலத்துறையின் பணிகள் மிக அதிகளவில் வேண்டிய தாகவுள்ளது.



வடக்கு கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரம் என்பது பிரதானமாக விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டது.

விவசாயம் எனும்போது நெல், மரக்கறிகள் மற்றும் பலவகையான பயிர்கள் விளைவித்தல் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்கள் விவசாயத்திற்குப் பெயர் பெற்றவை.

நீர்ப்பாசன வசதிகள், குளங்களை நம்பிய செய்கை மற்றும் சந்தை வாய்ப்புகள் இத்துறையின் பலமாகவும் சவாலாகவும் உள்ளன.

மீன்பிடித் தொழிலை நோக்கினால் கடல் மற்றும் வாவி, குளங்கள் என்பனவும், உள்நாட்டு மீன்பிடி வடகிழக்குக் கடற்கரைப் பகுதி மக்களின் பிரதான வாழ்வாதாரமாகும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இத் தொழிலை நம்பியுள்ளன.



கால்நடை வளர்ப்பு என்பது மாடு, ஆடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாடுகளை வீட்டில் கட்டி வளர்க்கும் குடும்பங்கள் மிக குறைவு பட்டியாக நிலத்தில் மேயவிட்டு மாடுகளை வளர்க்கும் பாரம்பரியம் பூர்வீக காலம் தொட்டு உள்ளது. அதற்காக மட்டக்களப்பில் மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரைகளில் காலம் காலமாக மாடுகள் வளர்க்கப்பட்டன. தற்போது பெரும்பான்மை இனத்தவர்களை கொண்டு குடியேற்றம் செய்து மேச்சல்தரைகளை அபகரிப்பதால் மாடுகள் மேய்வதற்கும் காணி இல்லாத நிலை உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் இனவிகி தாசாரத்தை குறைக்க திட்டமிட்ட சிங்கள குடியேற்றங் களுக்கு இந்த காணிகள் அபகரிப்பு செய்யப்படுகிறது.



பல போராட்டங்களை பண்ணையாளர்கள் மேற்கொண்டும் வாய்மூல உத்தரவாதமும் நம்பிக்கையும் மட்டுமே ஆட்சியாளர்களால் கூறியும் எந்த பயனும் இல்லை கடந்த 20/05/2026, ல் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் வருகை தந்த ஜனாதிபதி அநுர மேச்சல் தரைக்கு 1580, ஏக்கர் காணி வனபரிபாலன திணைக்களத்தில் இருந்து பெற்றுத்தருவதாக கூறினார், அந்த காணியில் மட்டக்களப்பில் உள்ள மூன்று இலட்சம் மாடுகளும் மேய்வதற்கு போதாது என்பதே பண்ணையாளர்களுடைய கருத்தாகும் 3000, கெக்டயர் காணி மேச்சல் தரைக்கு தேவை என்பதே உண்மை.

இந்த பிரச்சனைகளுக்கு அப்பால் வடகிழக்கில் தற்கால சவால்களாக காணி மற்றும் நிலப் பிரச்சினை, மக்களின் பூர்வீகக் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் அபகரிக்கப்படுவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. சட்ட விரோத மீன்பிடி வெளிமாவட்ட மற்றும் இந்திய இழு வைப்படகுகளின் அத்துமீறல்களால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.



அடிப்படை வசதிக் குறைபாடுகளாக நவீன சந்தைப் படுத்தல் வசதிகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் மூல தனம் இன்மையால் உற்பத்திப் பொருட்களுக்கான உரிய விலையை மக்கள் பெறுவதில் சிரமம் உள்ளது. நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழல் மற்றும் பொருட்களின் விலையேற்றம், சாதாரண உழைப்பாளர்களின் அன்றாட வாழ்க்கையை மேலும் கடினமாக்கியுள்ளது.

வடக்கு கிழக்கில் நில அபகரிப்பு என்பது ஒரு முக்கிய பிரச்சனையாக தொடர்கிறது. அதற்கு எதிராக மக்களுடன் சில அரசியல் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைக் குழுக்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதையும் காண்கிறோம். போருக்குப்பின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வடிவமாக இது தொடர்கிறது. நிலஅபகரிப்புக்கு எதிராக எழும் குரல்கள் நிலம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவசியமான உற்பத்திச்சாதனம் மட்டுமல்ல அதற்கும் அப்பால் அது அவர்களின் கூட்டு அடையாளத்தின் பொருள் ரீதியான அடித்தளமாய் அத்துடன் இணைந்த சுலபமாக அளவிடமுடியாத அகரீதியான குறியீட்டு விழுமியங்களின் உறைவிடமாய் விளங்குகிறது

சுருங்கக்கூறின் வடக்கு கிழக்கின் குடியேற்றத் திட்டங்கள் நிலமற்ற விவசாயிகளை அரசசெலவில் அரச காணிகளில் குடியேற்றும் திட்டமானது இனமேலாதிக்க அரசின் ஆள் புலத்தின் இனத்துவமயமாக்கல் கொள்கையின் அமுலாக்கலுக்கு உதவுகிறது. நிலமற்ற விவசாயிகளுக்கு நாட்டின் எந்தப்பகுதியிலும் அரச நிலத்தை வழங்குவது நிலமின்மைக்கு ஒரு தற்காலிகத் தீர்வாகலாம். அந்த வகையில் அது நியாயமானதாகவும் இருக்கலாம். ஆனால் இந்தக் குடியேற்றத்திட்டங்கள் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் இனச்செறிவை மாற்றும் நோக்குடன் பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்கத்தை உறுதியாக்கும் கருவியாகப் பயன்படுத்தபடுவதே பிரச்சனைக்குரியதாகும்.



ஒவ்வொரு அரசாங்கமும் குடியேற்றத்திட்டங்களை தமது கட்சி அரசியல் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் அதேவேளை குடியேற்றக் கொள்கையின் தொடர்ச்சியான அமுலாக்கல் செயற்திறன் மிக்க நிர்வாக இயந்திரத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. குடியேற்றக் கொள்கையின் அரசியல், கருத்தியல் மற்றும் கலாச்சார நோக்கங்களெல்லாம் இந்த நிர்வாக இயந்திரத்தி னால் உள்வாங்கப்பட்டுள்ளன.

தமிழ்தேசியவாதத்தின் தாயக கோரிக்கையின் அடிப்படையான இணைப்பை உடைப்பதே. இந்த வகையில் மணலாறு வெலிஓயாவாக மாறியது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. வடகிழக்கு இணைப்பின் இனரீதியான, பிரதே சரீதியான தொடர்ச்சியை மீட்க முடியாதவாறு உடைப்பதில் இந்த நிகழ்ச்சி அரசியல், புவியியல் மற்றும் குறியீட்டுக் காரணங்களால் விசேட முக்கியத்துவம் பெறுகிறது.

வறுமை பொருளாதார சீரின்மை காணி அப கரிப்பு வடகிழக்கில் ஒருபுறம் உள்ள நிலையில் கடந்த கால போர் மற்றும் வறுமை காரணமாக இயலாமைக்குட் பட்டோர்களாகவும் எமது தாயகத்தில் பலர் உள்ளனர் இவ்வாறு வடக்கு மாகாணத் தில் 21,668 பேரும், கிழக்கு மாகாணத்தில் 18,337 பேரும் முழு அளவிலும், பாதியளவிலுமாக இய லாமைக்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். பிர தான இயலாமைத் தன்மையின் அடிப்படையில் ஆராயும் போது, பார்வைக்குறைபாடுடையவர்கள் வடக்கு மாகா ணத்தில் 1,826 பேரும், கிழக்கு மாகாணத்தில் 1,598 பேரும் செவிப்புலன் இழந்தோர், வாய்பேச முடியாதோர் வடக்கில் 3,083 பேரும், கிழக்கில் 2,509 பேரும் உள்ளனர். அங்கங்களை இழந்தவர்கள் என்றவகைப்பாட்டில், கால் மற்றும் கைகளை

தொடர்ச்சி: பக்கம் 11




தீபச்செல்வன்

இலங்கையில் இயற்கையான காடுகள் பாதுகாக்கப் பட்டிருப்பது வடக்கு கிழக்கில்தான் என்று முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன ஒருமுறை பேசியிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் முப்பது ஆண்டு காலமாக ஈழத் தமிழ் மக்களை மாத்திரமின்றி, மண்ணையும் காடுக்களையும் வடக்கு கிழக்கின் அத்தனை ஜீவராசிகளையும் காத்து நின்றவர்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்றுகளில்லை. ஒருகாலத்தில் கடுமையான போர், பொருளாதாரத்தடை, நோய்த்தொற்று, பஞ்சம் நிலவிய நாட்களில் தற்சார்ப்பும் தன்னிறைவும் கொண்ட பொருண்மியச் சிந்தனையும் செயலும் வழியாக தமிழீழத்தை தலை சிறந்த தேசமாகத் தலைவர் அவர்கள் சாத்தியப்படுத்தினார். உண்மையில் இலங்கையில் விவசாயம், வனவளம், நிலவளம் என்று அத்தனைக்குமான பாடத்தை அன்று புலிகள் இயக்கம் உருவாக்கியது.




### போருக்குப் பிறகான விவசாயம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் முக்கியமான விவசாயப் பகுதிகளாகும். நெல், வெங்காயம், மிளகாய், நிலக்கடலை, புகையிலை, காய்கறிகள் மற்றும் பழவகைகள் போன்ற பல்வேறு பயிர்கள் இப்பகுதிகளில் பயிரிடப்படுகின்றன. ஆயினும், போருக்குப் பிந்தைய காலத்திலும் வடக்கு-கிழக்கு விவ சாயிகள் பல்வேறு பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகச் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சி னைகள் அவர்களின் வாழ்வாதாரத்தையும், உணவுப் பாது காப்பையும் கடுமையாக பாதிக்கின்றன.



முதலாவதாக, நீர்ப்பாசனப் பிரச்சினை மிக முக்கியமான ஒன்று. காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் மழைப்பொழிவு ஒழுங்கற்றதாக மாறியிருப்பதும் இலங்கை யின் தற்கால நெருக்கடிகளிலொன்று. நீண்ட வறட்சி காலங்களும் திடீர் வெள்ளப் பெருக்குகளும் விவசாய உற்பத்தியை பாதிக்கின்றன. பல குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகள் போதிய பராமரிப்பின்றி காணப்படுவதால், விவசாயிகளுக்கு தேவையான அளவு நீர் கிடைப்பதில்லை. குறிப்பாக வன்னி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை தீவிரமாக உள்ளது.

### இராணுவ ஆக்கிரமிப்புப் பிரச்சினைகள்

வடக்கு-கிழக்கில் நீடித்துவரும் இராணுவ ஆக்கிரமிப்பும் விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. போருக்குப் பின்னரும் பல வளமான விவசாய நிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்ததால், பல விவசாயிகள் தமது பாரம்பரிய வாழ்வாதார நிலங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. அதேவேளை, சில பகுதிகளில் இராணுவம் நேரடியாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதும், இராணுவத்தினரால் நடத்தப்படும் விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகள் மூலம் அவற்றை விற்பனை செய்வதும் உள்ளூர் விவசாயிகளுக்கு சமமற்ற போட்டியை உருவாக்குகின்றது.



அரச வளங்கள், போக்குவரத்து வசதிகள் மற்றும் கட்டமைப்பு ஆதரவுகளைப் பயன்படுத்தும் இராணுவ உற்பத்திகளுடன் போட்டியிட முடியாமல் உள்ளூர் விவசாயிகள் தமது விளைபொருட்களுக்கு நியாயமான விலையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன் விளைவாக விவசாயிகளின் வருமானம் குறைவதுடன், அவர்களின் பொருளாதார நிலைத்தன்மையும் பாதிக்கப்படுகிறது. விவசாயம் பொது மக்களின் வாழ்வாதாரத் துறையாக இருக்க வேண்டிய நிலையில், இராணுவத்தின் பொருளாதாரச் செயற்பாடுகள் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வளர்ச்சிக்கு தடையாக அமைவதாக பல விவசாய அமைப்புகளும் சமூக ஆர் வலர்களும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றனர்.

### கடன் சிக்கல்கள்

உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. உரம், விதைகள், பூச்சிக்கொல்லிகள், எரிபொருள் மற்றும் இயந்திர வாடகைச் செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. இதனால் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் கடன் சுமைக்கு ஆளாகின்றனர். பலர் தனியார் நிதி நிறுவனங்களிடமோ அல்லது வட்டிக்கடன் வழங்குபவர்களிடமோ கடன் பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பயிர் தோல்வியடைந்தால் இந்தக் கடன்களைச் செலுத்த முடியாமல் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்குகின்றனர். கடன்கள், பல சமூகச் சிக்கல்களுக்கும் அவலங்களுக்கும் மூலகாரணமாகின்றன.

சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளும் குறிப்பிடத்தக்கவை. விவசாயிகள் தங்களது விளை பொருட்களுக்கு நியாயமான விலையைப் பெற முடியாமல் உள்ளனர். இடைத்தரகர்கள் அதிக இலாபம் பெறுகின்ற நிலையில், உற்பத்தியாளர்களுக்கு குறைந்த வருமானமே கிடைக்கிறது. சேமிப்புக் கிடங்குகள், குளிர்சாதன வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போதாமையால் அறுவடைக்குப் பின்னர் பெருமளவு விளைபொருட்கள் வீணாகின்றன. இதுவும் விவசாயிகளின் வருமானத்தைக் குறைக்கிறது.மனித-விலங்கு மோதல்கள் பெரும் சவாலாக உள்ளன. குறிப்பாக காட்டு யானைகள் பயிர்களை சேதப்படுத்துவது வடக்கு மற்றும் கிழக்கின் பல பகுதிகளில் தீவிரமாக உள்ளது. இரவுகளில் விவசாய நிலங்களைப் பாதுகாக்க விவசாயிகள் உயிரைப் பணயம் வைத்து காவல் காக்க வேண்டிய நிலை ஏற்படுகிறதுசில சமயங்களில் மனித உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. இதனால் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குறைகிறது.

### போரின் நீண்டகால விளைவுகள்

இனவழிப்புப் போரின் நீண்டகால விளைவுகளும் இன்னும் முற்றிலுமாக நீங்கவில்லை. பல விவசாய நிலங்கள் கடந்த காலத்தில் கைவிடப்பட்டிருந்தன. சில இடங்களில் நில உரிமைச் சிக்கல்கள் தொடர்கின்றன. நிலங்களை மீட்டெடுத்த விவசாயிகளுக்கு போதிய நிதி, தொழில்நுட்ப மற்றும் கட்டமைப்பு ஆதரவு வழங்கப்படாததால், உற்பத்தித் திறன் முழுமையாக உயரவில்லை. இளைஞர்கள் விவசாயத்திலிருந்து விலகிச் செல்வதும் ஒரு முக்கியப் பிரச்சினையாகும். வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் வெளி நாட்டு வேலைக்காக இளைஞர்கள் நகரங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் இடம்பெயர்கின்றனர். இதனால் விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறை உருவாகிறது. வயதான விவசாயிகளே பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இது எதிர்காலத்தில் உணவு உற்பத்திக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.



இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள அரசு, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல், மலிவு விலையில் உற்பத்தி உள்ளீடுகளை வழங்குதல், விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்தல், காட்டு யானைத் தாக்குதல் களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நவீன விவசாய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் இளைஞர்களை விவசாயத் துறைக்கு ஈர்க்கும் திட்டங்களும் அவசியமாகின்றன.

தொடர்ச்சி: பக்கம் 12




தாயக எழுச்சிப்பாடலை பாடியதாக கூறி இளைஞர் ஒருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார். தமிழ் மண்ணையும் தமிழ் தேசியத்தினையும் தமிழ் தேசியத்தின் அடையாளங்களையும் தமது நெஞ்சில் சுமந்து பாடல்களைப்பாடிய உணர்வுள்ள இளந்தலைமுறையினரை கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது சிறிலங்கா அரசு.இந்த நாளிலேயே தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதல் விதையாக இருந்த பொன். சிவகுமாரனும் நினைவுகூரப்படுகின்றார்.



தமிழின விடுதலைக்காக தன்னுயிரை நீத்த முதல் தியாகி பொன்.சிவகுமாரன் அவர்களின் 52 வது ஆண்டு நினைவு நாள் நினைவுத்திருவுருவச்சிலை அமைந்துள்ள உரும்பிராய் சந்திக்கருகில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.இந்த நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தவிசாளர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்ததுடன் வாக்குமூலங்களும் அவரிடம் பெறப்பட்டிருந்தன.

பொன்.சிவகுமாரன் என்பவர் ஒரு விடுதலைப் போராளி என்பதையும் தாண்டி இந்த மண்ணில் விடுதலைப்போராட்டம் ஒன்று நிலையான கால்களை ஊன்றுவதற்கான அடித்தளமான ஒருவராகவும் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக தமிழ் இளைஞர்கள் கிளந்தெழுவதற்கான அடித்தளமாக அமைந்த ஒருவராகவும் வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றார்.

உரும்பிராயில் 1950 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் நாள் பொன்னுத்துரை, அன்னலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது மகவாக சிவகுமாரன் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்றவர். அந்தக் காலகட்டத்தில்தான் இலங்கையில் கல்வித் தரப்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது.இத்தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார்.

தமிழ் மக்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் போராடிய பொன். சிவகுமாரன், கடந்த 1974ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி உரும்பிராயில் வைத்து அப்போதைய ஸ்ரீலங்கா பொலிஸாரினால் கைது செய்யப்படவிருந்த தருணத்தில், தன்னுயிரை ஈகம் செய்யும் நோக்குடன் வீரச்சாவடைந்தார்.

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம் அகிம்சை வழியில் தோன்றி, பின்னர் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த நெடிய வரலாற்றைக் கொண்டது. தந்தை செல்வா போன்ற மிதவாத அரசியல் தலைமைகளின் சாத்வீகப் போராட்டங்கள் சிறிலங்கா அரசுகளின் அடக்குமுறைகளால் நசுக்கப்பட்ட போது, தமிழ் இளைஞர்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த ஆயுதப் போராட்ட வரலாற்றில், ஒட்டுமொத்த தமிழ் இளைஞர் சமுதாயத்திற்கும் ஓர் உந்துசக்தியாகவும், தியாகத்தின் முதல் குறியீடாகவும் விளங்குபவர் உரும்பிராயைச் சேர்ந்த தியாகி பொன். சிவகுமாரன் ஆவார்.




1970களில் இலங்கை அரசால் கொண்டுவரப்பட்ட 'கல்வித் தரப்படுத்தல்' சட்டம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்பைப் பெருமளவு பறித்தது. பல்கலைக் கழகங்களில் தகுதிக்கு ஏற்ப இடமளிக்கப்படாமல், இன அடிப்படையில் பாரபட்சம் காட்டப்பட்டமை தமிழ் இளைஞர்களைக் கொதித்தெழச் செய்தது. வேலைவாய்ப்பின்மை, அரச ஒடுக்குமுறைகள் மற்றும் சிங்கள குடியேற்றங்கள் ஆகியவை தமிழ் இளைஞர்களைத் தீவிர அரசியலை நோக்கி நகர்த்தின. தமது உரிமைகளை வென்றெடுக்கவும், தமது இனத்தை அடக்குமுறையிலிருந்து மீட்கவும் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்ற முடிவுக்கு இளைஞர்கள் தள்ளப்பட்டனர். இந்த இளைஞர் எழுச்சியின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் பொன். சிவகுமாரன் திகழ்ந்தார்.

பொன். சிவகுமாரனின் ஈடில்லாத் தியாகம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் மாபெரும் அரசியல் விழிப்புணர்வையும், ஆழமான விடுதலைத் தீயையும் மூட்டியது. அவரது மரணம் வடகிழக்கினையே உலுக்கியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அவருக்கு அஞ்சலி

மட்டுநகரான்

செலுத்தினர். அவரது தியாகத்தின் பின்னர், ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தங்களது கல்வியையும், ஒளிமயமான எதிர்காலத்தையும், குடும்பத்தையும் துறந்து பல்வேறு விடுதலைப் போராட்ட அமைப்புகளில் தங்களை இணைத்துக் கொண்டனர். பொன். சிவகுமாரனின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 5 ஆம் திகதி ஈழத் தமிழர்களால் 'தமிழ் மாணவர் எழுச்சி நாளாக' உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

பொன். சிவகுமாரன் ஏற்றிவைத்த விடுதலைத் தீ, பின்வந்த தசாப்தங்களில் ஈழப் போராட்டத்தை உலக அரங்கில் கொண்டு சென்றது. இளைஞர்களும் யுவதிகளும் தமது உயிரைத் துச்சமென மதித்து களமாடினர்.இந்த போராட்டம் வெறுமனே உணர்ச்சி அரசியலினால் ஏற்பட்ட போராட்டம் அல்ல இந்த நாட்டில் தமிழ் தேசிய இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையின் உச்ச வெளிப்பாடு என்பதை இன்றைய சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும்.



ஈழத் தமிழர் வரலாற்றுப் பக்கங்களில், அடக்குமுறைக்கு எதிராகத் தன்னுயிரைத் துச்சமென மதித்து களமாடிய ஈடில்லாத் தியாகத்தின் தொடக்கப் புள்ளியாக விளங்கியவர் பொன். சிவகுமாரன். தனது இனத்தின் விடிவுக்காகத் தனது இளமைக் காலத்தையும், ஒளிமயமான எதிர்காலத்தையும் அர்ப்பணித்த அவரது ஈகம், அன்றைய இளைஞர்களிடம் மாபெரும் எழுச்சியை வித்திட்டது. ஆனால், பல தசாப்தங்கள் கடந்த இன்றைய சூழலில், தமிழ் இளைஞர்களின் நிலைப்பாடு, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்கள் பயணிக்க வேண்டிய திசைவழி ஆகியவை குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

பொன். சிவகுமாரனின் கொள்கைகள் வெறுமனே உணர்ச்சிவசப்பட்ட கோபத்தின் வெளிப்பாடல்ல. அவை ஆழமான அரசியல் விழிப்புணர்வையும், இனப்பற்றையும்

**தொடர்ச்சி: பக்கம் 13**



# மறைக்கப்பட்ட உண்மைகளும் மலையகத்தின் எதிர்காலமும்

மருதன் ராம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரிதாக நிகழும் சில தருணங்கள் உள்ளன. குறிப்பாக, நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மீதான அநீதிகளை அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்வது அவற்றில் ஒன்றாகும். அண்மையில் இலங்கையின் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது அமைச்சர் பிமல் ரத்நாயக்க வழங்கிய கருத்துக்கள், மலையகத் தமிழர் சமூகத்தின் வரலாற்று அனுபவங்களை மீண்டும் தேசிய அரசியல் உரையாடலின் மையத்துக்கு கொண்டு வந்துள்ளன.



"மலையகத் தமிழர்கள் அல்லது இந்திய வம்சாவளித் தமிழர்கள் என அழைக்கப்படும் சமூகத்தினர், இலங்கையின் தேயிலை பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய முக்கியமான உழைப்பாளர்களாக இருந்த போதிலும், சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரசியல் மற்றும் சமூக அமைப்புகள் ரீதியாக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர்" என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

இந்த சமூகத்தின் வரலாறு வெறும் தொழிலாளர் என்ற நிலையில் மாத்திரமின்றி குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை இழப்பு, அரசியல் ஒதுக்கல், வறுமை, கல்வி பின்னடைவு, வீட்டு வசதி பற்றாக்குறை மற்றும் சமூக அவமதிப்புகள் என்பவற்றையும் உள்ளடக்கியே காணப்படுகிறது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலிருந்து இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதிகளுக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர்.



அவர்கள் அடர்ந்த காடுகளை வெட்டி தேயிலை, கோப்பி மற்றும் இறப்பர் தோட்டங்களை உருவாக்கினர். இன்று உலகப் புகழ்பெற்ற இலங்கைத் தேயிலைத் துறையின் அடித்தளத்தில் அவர்களின் உழைப்பு உள்ளது. ஆனால் அந்த உழைப்புக்கு ஈடாக கிடைத்தது சமூக உயர்வு அல்ல. பல தலைமுறைகளாக அவர்கள் தோட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள "லயன்" வீடுகளில் வாழ்ந்தனர்.

குறைந்த ஊதியம், மோசமான சுகாதார வசதிகள், தரமற்ற குடியிருப்புகள் மற்றும் கல்வி வாய்ப்புகளின் பற்றாக்குறை அவர்களின் வாழ்க்கையை நிர்ணயித்தன. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டங்களும் மலையகத் தமிழர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய அரசியல் அதிர்ச்சியை ஏற்படுத்தின. அந்தச் சட்டங்கள் ஆயிரக்கணக்கான மக்களை குடியுரிமையற்றவர்களாக மாற்றின.

அவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் வாழ்ந்த நாட்டில் அவர்கள் "அந்நியர்கள்" எனக் கருதப்பட்டனர். அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது, இந்த முடிவு இலங்கையின் தேர்தல் அரசியலையும் மாற்றியது. மலையகத் தமிழர்கள் வாக்குரிமை இழந்ததன் மூலம் தமிழர் அரசியல் பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைந்தது. இதன் விளைவுகள் பல தசாப்தங்கள் நீடித்தன என்று அவர் விமர்சித்திருந்தார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க தனது உரையில், சுதந்திரத்திற்குப் பிறகு எடுக்கப்பட்ட அரசியல் முடிவுகள் மற்றும் பாகுபாடான கொள்கைகள் மலையகத் தமிழர்களின் துயரங்களுக்கு காரணமாக இருந்ததாக ஒப்புக்கொண்டார்.



இது சாதாரண அரசியல் கருத்தாக மட்டும் பார்க்கப்பட முடியாது. ஏனெனில் இலங்கையின் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் குறிப்பாக அரசாங்கத்தின் பிரதம அமைப்பாளராக இருக்கின்ற பிமல் ரத்நாயக்க போன்றோர் இவ்வாறான வரலாற்று அநீதிகளை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வது அரிதாகும்.

எனினும், இந்த ஒப்புதல் மட்டுமே போதுமானதா என்ற கேள்வி எழுகிறது. மலையக சமூகத்தின் பிரதிநிதிகள், இந்தக் கருத்தை வரவேற்றாலும், கடந்த காலத்தில் பல் வேறு அரசியல் இயக்கங்கள் குறிப்பாக தற்போதைய ஆளும் மக்கள் விடுதலை முன்னணி கட்சியும் இந்த சமூகத்தின் உரிமைகளை ஆதரிக்கத் தவறியதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிற்கு பிறகு பாராளுமன்றில் கருத்துரைத்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "மலையக மக்களது பின்தங்கிய நிலைக்கு, காணி, வீடு, உரிமை மறுப்புக்கு, சிங்கள மக்கள் மனங்களில், எம்மை அந்நிய இந்தியர் என்றும், நாம் உருவாக்கிய பெருந்தோட்டங்கள், "இந்திய விஸ்தரிப்பு வாதம்" என்றும் இனவாதம் விதைத்த கறுப்பு வரலாறு JVP என்ற மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு மறந்து விட்டதா?" என்று கேள்வி எழுப்பினார்.

இந்தநிலையில் மலையக மக்களின் வாழ்க்கையை ஆராயும்போது, குடியுரிமை என்பது மட்டுமே பிரச்சினையல்ல என்பதை காண முடிகிறது. வீட்டு வசதி, நில உரிமை, கல்வி, சுகாதாரம், பெண்களின் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவை இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக உள்ளன. இலங்கை தேயிலை ஏற்றுமதியால் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டிய போதிலும், அந்தத் துறையின் முதுகெலும்பாக விளங்கிய தொழிலாளர்கள் நாட்டின் மிக ஏழ்மையான மக்களாகவே தொடர்ந்தனர்.

இந்த முரண்பாடு, இலங்கையின் வளர்ச்சி மாதிரியின் சமூக நீதி குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. மலையகப் பகுதிகளில் கல்வி முன்னேற்றம் ஏற்பட்டாலும், தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது இன்னும் பல சவால்கள் நீடிக்கின்றன. உயர்கல்வி அணுகல், தொழில்நுட்பக் கல்வி, மொழித் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திறன்கள் போன்ற துறைகளில் கூடுதல் முதலீடு தேவைப்படுகிறது. அதேபோல், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தனித்துவமானவை. தேயிலைப் பறிப்பு உள்ளிட்ட கடின உழைப்புகளில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடுகின்றனர்.



ஆனால் அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு, தொழிலாளர் உரிமைகள் மற்றும் சுகாதார வசதிகள் இன்னும் போதுமானதாக இல்லை. மலையக சமூகத்தின் போராட்டம் வெறும் பொருளாதாரப் போராட்டமல்ல. அது கண்ணியத்திற்கான போராட்டமாகவும் தொடர்கிறது. இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, "தென்னிந்தியாவிலிருந்து மலேசியா உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் வாழ்க்கை நிலை உயர்வு பெற்றுள்ள போதிலும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்களின் வாழ்க்கை நிலை இன்னும் மேம்பாடு அடையவில்லை" என்று தெரிவித்தார். "இந்த நாட்டை கட்டியெழுப்பிய மக்களாக அந்த மக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கை அதனுள் அடங்கியுள்ளது.

இன்றைய சூழலில், மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை தனிப்பட்ட இன அல்லது சமூகப் பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாது. அது இலங்கையின் ஜனநாயக வளர்ச்சி, சமத்துவம் மற்றும் சமூக நீதி பற்றிய சோதனையாகும். அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் உரை ஒரு முக்கிய அரசியல் அங்கீகாரமாக இருந்தாலும், வரலாற்று அநீதிகளை ஒப்புக்கொள்வது மட்டும் போதாது.

அதற்குப் பின்னரான செயற்பாடுகளே உண்மையான அளவுகோலாக அமையும். குறிப்பாக நில உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறதா? தோட்ட வீடுகள் மனித வாழ்வுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தப்படுகிறதா?இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகிறதா? பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் வலுப்படுத்தப்படுகிறதா? அரசியல் பிரதி

தொடர்ச்சி: பக்கம் 12




வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரானில் உள்ள கார்க் முனையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போட்ஸ்வானா கொடி ஏற்றப்பட்ட ஒரு எண்ணெய்க் கப்பல் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் இந்த வாரத்தின் ஆரம்பத்தில் ஏஜிஎம்-114 ஹெல்ஃபயர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின. வாஷிங்டன் விதித்த கடல் முற்றுகையை மீறியது என்ற இந்தத் தாக்குதல் கப்பலின் இயந்திர அறையை அழித்து, அக்கப்பலைச் செயலிழக்கச் செய்தது. எம்/டி லெக்ஸி என்ற எண்ணெய் கப்பலைத் தடுப்பதற்காக சர்வதேச கடல் பகுதியில் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளை மையம் தெரிவித்தது.



அதைத் தொடர்ந்த பதிலடியாக, எதிரிக்குச் சொந்த மான "பனாயா" என்ற கப்பல், ஐ.ஆர்.ஜி.சி கடற்படையின் ஏவுகணைகளால் தாக்கப்பட்டது. தெஹ்ரானின் முற்றுகையை உடைத்துக்கொண்டு செல்ல முயன்ற ஒரு கப்பலுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைக்குப் பதிலடியாகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.



பின்னர் அமெரிக்கப் படைகள் கெஷ்ம் தீவில் உள்ள ஒரு தளத்தின் மீதும் தாக்குதல் நடத்தின. அந்தத் தளம், இஸ்லாமியப் புரட்சிகரக் காவலர் படையால் தகவல் தொடர்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. கெஷ்ம் தீவில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு ட்ரோன் கட்டுப்பாட்டு நிலையம் மற்றும் ஒரு தகவல் தொடர்பு கோபுரம் அழிக்கப்பட்டன. நீரிணை நெடுகிலும் ஈரான் ஆயுதங்களை ஒழுங்கமைப்பதையும் தந்திரோபாய ரீதியாக நிலைநிறுத்துவதையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு, சமீப நாட்களில் நிகழும் தாக்குதல்களைப் போலவே இதுவும் மற்றுமொரு தாக்குதலாகும்.

ஆனால் இந்த முறை, ஈரானின் பதில் நடவடிக்கை எதிர்பார்த்ததை விடப் பெரியதாக இருந்தது. குவைத் சர்வ தேச விமான நிலையம் விமான மற்றும் ஹெலிகாப்டர் தளம், அத்துடன் அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படையின் தலை மையகம் ஆகியவை ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளால் தாக்கப்பட்டது.

இதன் விளைவாக, விமான நிலையம் மற்றும் தளம் கடுமையாகச் சேதமடைந்தன, விமானப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது, ஒருவர் கொல்லப்பட்டிருந்தார் மேலும் 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அலி அல்-சலேமில் உள்ள அமெரிக்கத் தளமும் கடுமையாகத் தாக்கப்பட்டது; ஈரான் ட்ரோன் சேமிப்பு மற்றும் தளவாடங்களைக் குறி வைத்தது. புதன்கிழமை(3) 13 ஏவுகணைகளையும், 17 ஆளில்லா விமானங்களையும் இடைமறித்ததாக குவைத் தெரிவித்துள்ளது. 72 மணி நேரத்தில், குவைத் இரண்டாவது முறையாகத் தாக்கப்பட்டது, பஹ்ரைன் முதல் முறையாகத் தாக்குதலுக்கு உள்ளானது.

ஈரானிய பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறிக்க முயன்ற பேட்ரியாட் விமான எதிர்ப்பு ஏவுகணைகளில் ஒன்று, ஏவப்பட்ட பிறகு, செயலிழந்து தனது பணியைச் செய்யத் தவறியதாகக் கூறப்படும் ஒரு காணொளி பலரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.



எண்ணெய் ஆலைகளில் சேதம் ஏற்பட்டதாகவும், காயங்கள் நிகழ்ந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பஹ்ரைனில், அமெரிக்காவின் 5வது கடற்படைத் தளங்கள் மீதும் குறைந்தது ஒரு ஏவுகணையாவது தாக்கியுள்ளது. ஈரானியத் தாக்குதலில் குவைத்தில் உள்ள அலி அல் சலேம் விமானப்படைத் தளத்தில் இருந்த ஒரு விமானக் கொட்டகை அழிக்கப்பட்டதை, புதிதாக வெளியிடப்பட்ட செயற்கைக்கோள் படங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஈரானிய ஏவுகணைகள் ஜோர்டானில் உள்ள தளங்களையும் குறிவைத்தன, இருப்பினும் சேதம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. கத்தாரில், அல்-உதெய்ட் விமா னத் தளம் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகளும் ஆளில்லா விமானங்களும் தாக்கப்பட்டன. அதன் சுற்றுப்புறங்களிலும் சேதம்ஏற்பட்டதுடன்,முன்கூட்டியேஎச்சரிக்கைசெய்யும்ரேடார் அமைப்புகளும் தாக்கப்பட்டன. இந்த ஜூன் 3ஆம் தேதி, வடக்கு ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தளங்களையும் ஈரானியத் தாக்குதல் குறிவைத்தது.

போர்நிறுத்தக் காலத்தில் ஈரான் நடத்திய மிகவும் கடுமையான தாக்குதல் இதுவாகும், மேலும் தாக்குதல்கள் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈரானின் பாதுகாப்பு அமைப்புகள் அமெரிக்காவினால் தந்திரோபாயமாகக் குறி வைக்கப்பட்டு, அதன் எண்ணெய் மீதான முற்றுகை பெரிய அளவிலான விற்பனையைத் தடுப்பதால், பல வாரங்களாக ஈரான் ஒரு மெதுவான கொதிநிலையில் இருந்தது.

மற்ற சந்தர்ப்பங்களைப் போலல்லாமல், ஹோர்முஸ் மற்றும் வளைகுடாப் பகுதிகளில் ஈரானிய இராணுவ ஆயுதங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், அதே நேரத்தில் ஈரானிய அரசின் வருவாயைக் குறைப்பதற்கும் டிரம்ப் இப்போது ஒரு உறுதியான திட்டத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.



அமெரிக்க கடற்படை மத்திய கிழக்கு பிராந்தியங்க ளில் தொடர்ந்து ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அரபிக்கடலின் வடக்குப் பகுதியில், 'ஆபிரகாம் லிங்கன்' மற்றும் 'ஜார்ஜ் புஷ்' ஆகிய விமானம் தாங்கி கப்பல்களின் தலைமையில் இரண்டு விமானம் தாங்கி தாக்குதல் குழுக்கள் ஒரே நேரத்தில் இயங்கி வருகின்றன. மேலும், 'திரிப்போலி' என்ற நீர்நிலப் படைக் குழுவும் அப்பகுதியில் உள்ளளது.

இத்தகைய குறிப்பிடத்தக்க கடற்படைகளின் குவிப்பு, நெருக்கடி சூழ்நிலைகளுக்கு விரைவாக பதிலடி கொடுக்கவும், தரை மற்றும் கடல் இலக்குகளைத் தாக்கவும், மற்றும் அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவின் பொறுப்புப் பகுதியில் உள்ள நட்பு நாடுகளுக்கு ஆதரவளிக்கவும் வாஷிங் டனுக்கு களத்தை வழங்குகிறது.



அதேசமயம் ஈரான் ஏன் குவைத்தை கடுமையாக தாக்குகின்றது என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. இப்பகுதி யில் அமெரிக்காவின் 6 டார்க் ஈகிள் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உள்ளன; அவை தொலைதூரத்தில் சோதிக் கப்பட்டதோ அல்லது போரில் பயன்படுத்தப்பட்டதோ இல்லை, "இதுபோன்ற சோதிக்கப்படாத ஆயுதத்தை கடைசி முயற்சியாக ஏவக்கூடாது.

அதை இலக்கிற்கு அருகில் நிலைநிறுத்தி, நிலத்தடி பதுங்கு குழிகளில் பாதுகாத்து, அது வெற்றி பெறுவதற்கான அதிகபட்ச வாய்ப்பை வழங்க வேண்டும்." இதனால்தான் குவைத்தில் உள்ள அலி அல் சலேம் விமானப்படைத் தளம் மிகவும் தர்க்கரீதியான ஏவுதளமாக உள்ளது, மேலும் இதனால்தான் ஈரான் இப்போது அதைத் தாக்குகிறது. அமெரிக்கா தனது மிகவும் மேம்பட்ட தொலைதூரத் தாக்குதல் ஆயுத அமைப்பை முதல் முறையாகப் பயன்படுத்தும்போது

**தொடர்ச்சி: பக்கம் 11**




# ஆபிரிக்காவில் சீனாவின் டிஜிட்டல் பாய்ச்சல் - ஸ்விஃப்டின் முடிவா?

தமிழில்: **ஆர்தீகன்**

ஆபிரிக்காவில் சீனா தனது பொருளாதார இருப்பை இரட்டிப்பாக்கி வருவதால், இந்த உறவு வெறும் கட்டடங்களையும் தாண்டி ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைகிறது.

பெய்ஜிங் செயல் திட்டம் 2025-2027, ஆபிரிக்கா முழுவதும் 30 உள்கட்டமைப்பு இணைப்புத் திட்டங்களுக்கான ஆதரவை உள்ளடக்கியுள்ளது. அதே நேரத்தில், கென்யா மற்றும் உகாண்டா போன்ற நாடுகள், ஸ்டாண்டர்ட் கேஜ் ரயில்வே விரிவாக்கம் மற்றும் உகாண்டா எல்லையை நோக்கிய ரிரோனி-மௌ உச்சிமாவட்ட நெடுஞ்சாலை போன்ற சீன ஆதரவு போக்குவரத்து இணைப்புகளை ஏற்கனவே புத்துயிர் அளித்து வருகின்றன.



கண்டத்தின் நிதி எதிர்காலத்தைக் கண்காணிக்கும் ஆய்வாளர்களுக்கு, இந்த முன்னேற்றங்கள் முக்கியமானவை. ஏனெனில் அவை பொருட்களை நகர்த்துவது மட்டுமல்லாமல், சீனாவின் டிஜிட்டல் RMB (டிஜிட்டல் யுவான்/இ-CNY) ஐ மையமாகக் கொண்ட ஒரு இணையான கட்டண முறைக்கான வணிகக் கட்டமைப்பை உருவாக்கக்கூடும். இது ஆப்பிரிக்கப் பொருளாதாரங்களுக்கு வேகமான, டாலரை குறைவாகச் சார்ந்த வர்த்தகம் செய்வதற்கான வழியை வழங்கக்கூடும்.


ஸ்விஃப்ட் மற்றும் இடைத்தரகு வங்கிகளை மையமாகக் கொண்ட, மேற்கத்திய ஆதிக்கம் செலுத்தும் உலகளாவிய கட்டண முறை, அதிக பரிவர்த்தனைச் செலவுகள், தாமதங்கள் மற்றும் புவிசார் அரசியல் அழுத்தங்களுக்கு எளிதில் ஆளாகும் தன்மை ஆகியவற்றிற்காக நீண்ட காலமாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. ஆனால், சீனா தனது டிஜிட்டல் எல்லை கடந்த பணப் பரிமாற்ற முறையை விரிவுபடுத்தி, ஆபிரிக்காவுடனான உறவுகளை ஆழப்படுத்துவதால், கண்டம் முழுவதும் எல்லைகளுக்கு அப்பால் பணம் பரிமாற்றம் செய்யப்படும் விதத்தில் இந்தத் தளம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



ஆபிரிக்காவில் உள்ள பல நாடுகளுக்கு, சீனாவின் டிஜிட்டல் யுவான், "வர்த்தகத்திற்கான மாற்று நிதித் தளங்களை வழங்குவதன் மூலம், பாரம்பரிய புவி-வர்த்தக உறவுகளை மெதுவாக மறுவரையறை செய்கிறது" என்று நைரோபியைச் சேர்ந்த வளர்ச்சி மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் நிபுணரான மைக்கேல் ஓவோர் குறிப்பிடுகிறார்.

"ஆப்பிரிக்கப் பொருளாதாரங்களுக்கு, இந்த புதிய எல்லை கடந்த தளம், பிராந்திய மற்றும் கண்ட அளவிலான வர்த்தக அமைப்புகளை விரைவுபடுத்தவும், மேற்கத்தியக் கட்டுப்பாட்டில் உள்ள நிதி அமைப்புகள் மற்றும் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தைக் குறைக்கவும், மேலும் கண்டம் நீண்ட காலமாக ஏங்கி வரும் நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்தவும் ஆற்றலைக் கொண்டுள்ளது," என்று கென்யாவின் நைரோபியைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான குளோபல் சென்டர் ஃபார் பாலிசி அண்ட் ஸ்ட்ராடஜி (GLO-CEPS)-இல் பணிபுரியும் ஓவோர் கூறினார்.

ஒவுவோரின் கூற்றுப்படி, சீனாவின் பட்டுப்பாதை முன்முயற்சியில் (BRI) ஆழமாக ஒருங்கிணைந்து, டிஜிட்டல் நிதித் தீர்வுகளை அதிகளவில் சார்ந்திருக்கும் ஆப்பிரிக்கப் பிராந்தியத்திற்கு, டிஜிட்டல் யுவான் பலதரப்பட்ட வாய்ப்புகளை வழங்குகிறது.



"அமெரிக்க டாலர் போன்ற கையிருப்பு நாணயங்களைச் சார்ந்திருக்காமல், உலகளாவிய வணிகங்களும் நுகர்வோரும் யுவானில் நேரடியாகப் பரிவர்த்தனை செய்வதை எளிதாக்குவதற்கான சீனாவின் பரந்த முயற்சியின் ஒரு பகுதிதான் இந்தத் தளம்," என்று ஓவோர் RT-யிடம் கூறினார்.

சீனாவின் டிஜிட்டல் யுவானை பிளாக்செயின் தொழில்நுட்பத்தில் நிலைநிறுத்துவது, எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை வேகமாகவும், மலிவாகவும், மேலும் வெளிப்படையாகவும் மாற்றும் என்று ஓவோர் குறிப்பிடுகிறார்.

"டிஜிட்டல் RMB-யின் பிளாக்செயின் அடிப்படையிலான கட்டமைப்பு, எல்லை தாண்டிய பரிவர்த்தனை நேரங்களை வெறும் சில வினாடிகளாகக் குறைக்கிறது. இது, பல இடைநிலை வங்கிகளை உள்ளடக்கி, 3-5 வணிக நாட்கள் வரை எடுத்துக்கொள்ளும் பாரம்பரிய SWIFT பரிவர்த்தனைகளைப் போலல்லாமல் உள்ளது. இதனால், பணம் செலுத்தும் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகக் கட்டணங்களும், பரிவர்த்தனைகளைச் செயல்படுத்துவதில் தாமதங்களும் ஏற்படுகின்றன," என்று ஓவோர் கூறினார்.

டிஜிட்டல் RMB தளங்கள், பரிவர்த்தனை நேரங்களை ஏறக்குறைய நிகழ்நேரத்திற்குக் குறைத்து, செலவுகளை 40-60% அல்லது அதற்கும் மேலாகக் குறைக்க முடியும்.

மேலும், எல்லை தாண்டிய பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அதிக செலவுகள் நீண்ட காலமாக வர்த்தகம், முதலீடு மற்றும் மூலதனப் பரிமாற்றத்தைத் தடுத்து வரும் வளரும் பொருளாதாரங்களுக்கு இதன் செயல்திறன் குறிப்பாக ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று ஓவோர் வாதிடுகிறார்.

"இந்த அமைப்பில் உட்பொதிக்கப்பட்ட ஸ்மார்ட் ஒப்பந்தங்கள், ஒழுங்குமுறைத் தேவைகளைத் தானாகவே அமுல்படுத்துகின்றன. மோசடி அபாயங்களைக் குறைக்கின்றன, மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகின்றன," என்று அவர் மேலும் கூறுகிறார்.

உலக தெற்கு நாடுகளுக்கு எதிராக டிரம்ப் நிர்வாகம் எடுத்த தண்டனைக்குரிய பொருளாதார நடவடிக்கைகள், "தற்செயலாக மாற்று நிதித் தளங்களுக்கான தேவையைத் தூண்டியுள்ளன" என்று நைரோபியைச் சேர்ந்த சுயாதீன ஆலோசகரும் மேம்பாட்டு நிதி நிபுணருமான ஜோசப் கிமோதோ வாதிடுகிறார்.

"உலக வர்த்தகத்தில் அமெரிக்க டாலரின் ஆதிக்கம் குறித்து வளர்ந்து வரும் சந்தேகம் நிலவுகிறது என்பது இரகசியமல்ல. பொருளாதார மற்றும் அரசியல் தடைகளுக்கான ஒரு கருவியாக வாஷிங்டன் சுங்கவரிக் கொள்கையை ஆயுதமாக்குவது, டிஜிட்டல் யுவானை ஒரு நம்பிக்கைக்குரிய மற்றும் வரவேற்கத்தக்க தேர்வாக ஆக்குகிறது," என்று கிமோதோ கூறினார்.

"அமெரிக்கத் தடைகள் மற்றும் டாலர் சார்புநிலையிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள விரும்பும்" அதே வேளையில், சர்வதேச வர்த்தகத்தில் தங்கள் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் நாடுகளுக்கு, சீனாவின் கட்டண முறை ஒரு மாற்றீட்டை வழங்குகிறது என்று கிமோதோ பரிந்துரைக்கிறார்.



BRI-இல் ஆபிரிக்காவின் ஒருங்கிணைப்பு, அத்தளத்தின் விரிவாக்க முயற்சிகளால் அதனை இயல்பான பயனாளியாக ஆக்குகிறது என்று அவர் கூறுகிறார். மேலும், 'டிஜிட்டல் பட்டுப்பாதை' என்று அழைக்கப்படும் இந்த அமைப்பு, BRI-இன் கீழ் உள்ள அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கும் அடித்தளமாக அமைய அதிக வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

"இது, உலக தென்பகுதி மத்திய வங்கிகள் யுவானை தங்கள் வெளிநாட்டு கையிருப்புகளின் ஒரு பகுதியாக வைத்திருக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டக் கூடும்," என்று அவர் கருதுகிறார்.

'ஒற்றை நாணயத்தின் மீதான அதீத சார்புநிலைக்கு எதிராக ஆபிரிக்கா எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' ஆபிரிக்காவில் டிஜிட்டல் யுவானின் நுழைவு, பான்-ஆப்பிரிக்க கொடுப்பனவு மற்றும் தீர்வு அமைப்புகள் (PAPPS) போன்ற கண்ட அளவிலான கொடுப்பனவு உள்கட்டமைப்புகளுடன் அதன் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கக்கூடும் என்று கம்பாலாவைத் தளமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி மையத்தின் வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்புத் தலைவர் ஐசக் ஷின்யேக்வா குறிப்பிடுகிறார்.

"பிராந்திய மற்றும் கண்ட வர்த்தகத்தில் PAPPS-ன் ஆழமான வேரூன்றலும், RMB எல்லை தாண்டிய

தொடர்ச்சி: பக்கம் 11

## முப்படைகளின் பலமா? ... தொடர்ச்சி...

625' என்ற அதிநவீன ரோந்துக் கப்பலைக் கொடையாக வழங்கியது. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மீதான சீனாவின் கட்டுப்பாடும், அதன் 'மறைமுக இராணுவப் பயன்பாட்டு' அச்சமும் பிராந்தியத்தில் பெரும் விவாதப் பொருளாக உள்ளது.

அதேபோல, இலங்கையின் விமானப்படை மற்றும் காலாட்படை வீரர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளையும், போர்க்காலத்தில் அவசர ஆயுத விநியோகங்களையும் வழங்கியதன் மூலம் பாகிஸ்தான் இலங்கையின் பாதுகாப்புத் துறையில் நம்பகமான பங்காளியாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

ஜப்பானும் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் அனர்த்த முகாமைத்துவத்தில் தொடர்ந்து இலங்கைக்கு நிதியுதவிகளையும், சிறிய ரக ரோந்துப் படகுகளையும் வழங்கி வருகிறது.

தற்போது கண்காணிப்பு ட்ரோன்களை வழங்கவும் ஜப்பான் முன்வந்துள்ளது. இது சீனாவின் 'ஒரே மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி' திட்டத்திற்குப் போட்டியாக ஜப்பானின் 'சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக்' கொள்கையின் கீழ் அமைகிறது.

வல்லரசுகளின் இந்த அதீத 'கொடைக் கலாசாரம்' இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் எதிர்காலத்தை சிக்கலான புள்ளிக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

அமெரிக்கா மற்றும் சீனா வழங்கும் கப்பல்களும் ஹெலிகொப்டர்களும் ஏற்கனவே பயன்படுத்தப் பட்டவையாகும். இவை ஆரம்பத்தில் கொடையாகக் கிடைத்தாலும், இவற்றின் நீண்டகாலப் பராமரிப்பு, உதிரிப்பாகங்கள் கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்கு இலங்கை அந்தந்த நாடுகளிலேயே தங்கியிருக்க வேண்டும்.

இது இலங்கையின் பாதுகாப்பு வரவு,செலவுத் திட்டத்தில் மறைமுகப் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துவதோடு, அவசர காலங்களில் அந்த நாடுகள் உதிரிப்பாக விநியோகத்தை நிறுத்தினால் இத்தளவாடங்கள் முடங்கிப் போகும் அபாயமும் உண்டு.

மேலும், இலங்கைப் படைகளின் ஒரு பிரிவினருக்கு அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் பயிற்சியளிக்க, மறுபுறம் சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் தத்தமது இராணுவக் கோட்பாடுகளின்படி பயிற்சியளிக்கின்றன.

ஒரே பாதுகாப்புப் படைக்குள் வெவ்வேறான மூலோபாயக் சிந்தனைகளைக் கொண்ட நாடுகள் ஊடுருவும் போது, அது இலங்கையின் தேசியப் பாதுகாப்புக் கொள்கையில் ஒருமுகத்தன்மை இல்லாமையை ஏற்படுத்தும்.

சர்வதேச நாடுகள் வழங்கும் நவீன கண்காணிப்பு உபகரணங்கள் மூலம் சேகரிக்கப்படும் கடல்சார் புலனாய்வுத் தகவல்கள் மறைமுகமாக அந்த வல்லரசுகளின் கட்டுப்பாட்டு மையங்களுக்கும் பகிரப்படும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்பதால், இலங்கையின் கடல் எல்லைக்குள் நடக்கும் அனைத்து நகர்வுகளையும் வெளிப்புற சக்திகள் கண்காணிக்கும் நிலையும் உருவாக்கும் ஆபத்துக்கள் நிறைந்து வருகின்றன.

சர்வதேச நாடுகள் இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரும்புகிறதோ இல்லையோ, இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் தமது சொந்தப் பாதுகாப்பு நலன்களை அடைந்துகொள்ள முயல்கின்றன என்பதே தற்போதைய யதார்த்தம்.

பூகோளசக்திகளின் இந்த மூலோபாயப் போட்டியை இலங்கை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சாதுரியமான இராஜதந்திரத்தைக் கையாள வேண்டும். எந்தவொரு குறிப்பிட்ட வல்லரசுக்கும் இலங்கையின் இராணுவத் தளங்களையோ அல்லது கொள்கைகளையோ தாராளமாகப் பயன்படுத்த இடமளிக்கக்கூடாது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலில், சொந்தப் பணத்தில் வாங்க முடியாத நவீன கப்பல்களையும் ஹெலிகொப்டர்களையும் கொடையாகப் பெற்று, நாட்டின் கடல்சார் வளக் கொள்ளை, மனிதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு இவற்றை இலங்கை திறம்படப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பூகோள அரசியல் சதுரங்கத்தில் இலங்கை பகடைக் காயாகவும் மாறிவிடாமல், அதேநேரம் வல்லரசுகளின் தேவைகளைத் தனது சொந்தத் தேசியப் பாதுகாப்புப் பலமாக மாற்றிக் கொள்ளும் புத்திசாலித்தனமான இராஜ தந்திரப் பாதையிலேயே அதன் எதிர்காலப் பாதுகாப்பு தங்கியுள்ளது.

• • •

## ஆப்பிரிக்காவில் சீனாவின் ... தொடர்ச்சி...

பணப்பரிவர்த்தனைத் தளத்துடனான மூலோபாய ஒத்துழைப்பும், ஆப்பிரிக்க நாடுகள் பிராந்தியங்களுக்குள்ளான பரிவர்த்தனைகளுக்கு SWIFT-ஐத் தவிர்த்து, செலவுகளையும் தாமதங்களையும் குறைக்க உதவும்" என்று அவர் கூறினார்.

1.3 பில்லியன் மக்களுக்கான ஒற்றைச் சந்தையை உருவாக்கும் நோக்கம் கொண்ட ஆப்பிரிக்க கண்ட சுதந்திர வர்த்தகப் பகுதிக்கு, திறமையான எல்லை தாண்டிய பணப்பரிவர்த்தனை அமைப்புகள் இன்றியமையாதவை என்றும் ஷின்யேக்வா மேலும் கூறுகிறார்.

"டிஜிட்டல் யுவானின் வேகம் மற்றும் குறைந்த செலவு ஆகியவை மூலதனப் பரிமாற்றத்தை விரைவுபடுத்தி, அதன் மூலம் ஆபிரிக்காவிற்குள் நடைபெறும் வர்த்தகத்தை அதிகரிக்கும். ஆபிரிக்கா இதை ஏற்றுக்கொள்வது பிராந்திய ஒருங்கிணைப்பை விரைவுபடுத்தி, அமெரிக்கத் தடைகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து, நிதி உள்ளடக்கத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும்," என்று ஷின்யேக்வா கூறினார்.

வரும் காலங்களில், ஆபிரிக்காவில் சீன நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு இந்த டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைத் தளங்கள் மூலமாகவே நேரடியாக நிதியளிக்கப்படும் ஒரு சூழலை ஓவோர் முன்னறிவிக்கிறார். இருப்பினும், இந்த மாற்ற செயல்முறை கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்று அவர் எச்சரிக்கிறார்.

"பயனர்கள் மற்றும் நாடுகளின் தரவு உரிமைகள் உட்பட, ஒழுங்குமுறை, தொழில்நுட்பம் மற்றும் புவிசார் அரசியல் சவால்கள் மற்றும் வாய்ப்புகளைக் கவனமாகக் கையாள்வது அவசியமாகும். ஆபிரிக்கா ஒரே நாணயம் அல்லது அமைப்பை அதிகமாகச் சார்ந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும், இதன் மூலம் புதிய வகையான நிதிச் சார்புநிலைகளைத் தவிர்க்க வேண்டும்," என்று ஓவோர் முடிக்கிறார்.

• • •

## வடகிழக்கு மக்களின் ... தொடர்ச்சி...

இழந்தவர்கள் வடக்கில் 10,581 பேரும், கிழக்கில் 4,228 பேரும் காணப்படுகின்றனர்.

மனநலப் பாதிப்புக்குட்பட்டோர் என்றவகையில் வடக்கில் 6,182 பேரும், கிழக்கில் 4,887 பேரும் காணப்படுகின்றனர். இந்த நபர்களில், முழுமையாக இயலாமைக்குட்பட்டோராக இல்லங்களில் பராமரிப்புச் செய்யப் படுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் 8 பராமரிப்பு நிலையங்களில் 221 பேரும், வடக்கு மாகாணத்தில் 3 பராமரிப்பு நிலையங்களில் 193 பேரும் பரா மரிக்கப்பட்டு வருகின்றனர். இயலாமைக்குட்பட்டோரின் வெளிப்படையான தகவல்களுக்கிடையில்,உட்கிடையாக இருகால்களை இழந்தவர்கள், இருகைகளை இழந்தவர்கள், முள்ளந்தண்டு வடம் பாதிப்படைந்தோர், வலிப்புநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு வகையான உப பாதிப்புகளுடன் கூடிய நபர்களும் காணப்படுகின்றனர். இவ்வகையினருக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஏனைய வகை மக்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளைவிட வேறுபட்டதும் சிக்கலானதுமாகக் காணப்படுகின்றன.

பராமரிப்பாளர்கள் இல்லாதநிலையில், காப்பகங்களில் தங்கியுள்ள முதியோர் எனப்பார்க்கும்பாது, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் 4 தனியார் நிர்வகிப்பு நிலையங்களில் 73 பேரும், மட்டக்களப்பில் 5 தனியார் நிர்வகிப்பு நிலையங்களில் 106 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 2 அரசநிலையங்களில் 40 பேருமாக, 219 பேர் காப்பகங்களில் பராமரிக்கப்படுகின்றனர். வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் 6 இல்லங்களில் 26 பேரும், கிளிநொச்சியில் 01 இல்லத்தில் 18 பேரும், மன்னாரில் 04 இல்லங்களில் 524 பேருமாக, 985 பேர் காப்பகங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் .(இந்த தகவல்கள் ஊடகங்களில் இருந்து பெறப்பட்டன)

போர் நிறைவடைந்து 17, வருடங்கள் கடந்தாலும் வடக்கு கிழக்கில் வறுமையும், நிரந்தர தொழில் இல்லாமையாலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு தினமும் நூற்றுக் கணக்கானவர்கள் செல்வதை காணமுடிகிறது.

தற்போது என்றுமில்லாத வகையில் எரிபொருள் விலைஏற்றம் காரணமாக சகல அத்தியாவசிய பொருட்களுடைய விலைகள் அதிகரித்துள்ளன இதனால் சாதாரண நடுத்தர குடும்பங்கள் மேலும் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான வாழ்வாதார சிக்கல்களுக்கும், பின்னடைவுகளுக்கும் அப்பால் இளைஞர்களிடையே போதைவஸ்த்து பாவனை, மதுபான பாவனைகளை திட்டமிட்டு ஊக்குவிக்கும் சதிகளும் வடகிழக்கில் தொடர்வதையும் தடுக்கமுடியாமல் உள்ளது.

கடந்த 02/06/2026ல் போதைவஸ்த்துக்கு அடிமையாகி மட்டக்களப்பு கல்லடி பொலிஸ்பயிற்சி நிலையத்தில் 14, நாட்கள் புனர்வாழ்வு வழங்கப்பட்ட 30, இளைஞர்கள் தமது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டனர்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்சியாக உள்நாட்டு போரினாலும், வறுமையினாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளாலும் தொடர்ந்தும் பாதிப்பை எதிர்நோக்கும் மாகாணங்களாகவே காணப்படுகின்றன.

• • •

## சொல்லிசைப் பாடகர் ... தொடர்ச்சி...

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள் மற்றும் சமூக அமைப்புகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் கலை வெளிப்பாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். ஒரு கலைஞரின் படைப்புகள் அல்லது கருத்துகளை அடக்குவது ஜனநாயகமல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இந்தோனேசியாவின் ... தொடர்ச்சி...

குறிப்பாக இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக வர்த்தக சமநிலைகளில் ஏற்பட்ட அழுத்தம், மூலதன வெளியேற்றத்திற்கும் நாணயங்களின் பலவீனத்திற்கும் வழிவகுத்துள்ளது.

புதன்கிழமையன்று(3) வளைகுடாப் பகுதிகளில் மீண்டும் பதற்றம் அதிகரித்ததால், எண்ணெய் விலைகள் 1 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்தன.

பிராந்திய நிச்சயமற்ற தன்மையை மேலும் அதிகரிக்கும் வகையில், கட்டாய உழைப்புத் தோல்விகள் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, இந்தோனேசியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் அல்லது 12.5 சதவீதம் கூடுதல் இறக்குமதி வரிகளை விதிக்க அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

சந்தை முதலீட்டாளர்களுக்கு 18,000 என்ற நாணய மாற்று விகிதம் ஒரு "உளவியல் ரீதியான வரம்பு" என்று பெர்மாட்டா வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணர் ஜோசுவா பர்தேடே கூறினார்.

எண்ணெய் விலையேற்றத்தால் ஏற்பட்ட அதிக டொலர் தேவை மற்றும் சுருங்கிவரும் வர்த்தக உபரி ஆகிய வற்றால் இந்த பலவீனம் ஏற்பட்டது என்று அவர் AFP செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

ரூபாயை நிலைப்படுத்தவும், பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், மத்திய வங்கி கடந்த மாதம் வட்டி விகிதங்களை 0.5 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தி 5.25 சதவீதமாக நிர்ணயித்தது. இது இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட முதல் உயர்வாகும்.

## அமெரிக்காவுக்கு கடுமை ... தொடர்ச்சி...

அது தோல்வியடைந்தால், அதனால் ஏற்படும் மூலோபாய மற்றும் நற்பெயர் சேதம் பேரழிவாக இருக்கும் என லெப்டினன்ட் கர்னல் அந்தோனி அகிலார் தெரிவித்துள்ளார்.

ஈரானிய அணுசக்தி நிலையங்களைத் தாக்கும் திறன் கொண்ட அமெரிக்காவின் டார்க் ஈகிள் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை ஏவுவதற்கு குவைத்தே மிகவும் சாத்தியமான தளமாக இருக்கும். ஈரான் இதை அறிந்திருக்கக்கூடும், எனவே தான் ஈரான் குவைத்தை குறி வைத்து தாக்கி வருகின்றது. மேலும் தங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பே ஏவுகணை ஏவுதள உள்கட்டமைப்பைத் தாக்கி வருகிறது. அமெரிக்காவின் இடைமறிப்பு ஏவுகணைகளின் கையிருப்பு சில வகைகளில் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது, மீதமுள்ளவற்றில் பெரும்பாலானவை இஸ்ரேலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் ஈரானுக்கு எதிரான போருக்கான அமெரிக்காவின் செலவுகள் 97 நாட்களில் 100 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது.உலகின் பொருளாதாரமும் கடும் சேதநத்தை சந்தித்து நிற்கின்றது. எண்ணெய் விலைகளைக் கட்டுப்படுத்த டிரம்ப் மீண்டும் புதிய கதைகளை சொல்கிறார்: "நான் ஈரான் தலைவரைச் சந்திக்கப் போகிறேன்!" : "ஈரான் தலைவர் தற்போது எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார், ஒருவேளை ஒரு கட்டத்தில் நான் அவரைச் சந்திப்பேன்!" என தெரிவித்துள்ளார்.

மறுவளமாக இஸ்ரேலின் பெய்றூட் மீதான தாக்குதல் திட்டத்திற்கு பதிலடியாக வடக்கு இஸ்ரேலை தாக்கப்போவதாக ஈரான் தெரிவித்ததுடன், பேச்சுக்களில் இருந்து விலகியதும் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவை பைத்தியக்காரன் என்று அழைத்ததாகவும், நன்றிகெட்டவர் என்று குற்றம் சாட்டியதாகவும் கூறப்படுகிறது. இஸ்ரேலியப் பிரதமரிடம் அவர், "நான் மட்டும் இல்லையென்றால், நீங்கள் சிறையில் இருந்திருப்பீர்கள். இப்போது எல்லோரும் உங்களை வெறுக்கிறார்கள். உங்களால், எல்லோரும் இஸ்ரேலை வெறுக்கிறார்கள்" என்று பேசியதாக ஆக்சியோஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் போர் தொடர்வதை இஸ்ரேல் மட்டுமே விரும்புகிறது. லெபனான் விவகாரத்தில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளை தெஹ்ரான் நிறுத்தி வைத்துள்ளது. இதன் மூலம், அது ஹிஸ்புல்லாவின் பாதுகாவலர் மட்டுமல்ல, லெபனான் மற்றும் அனைத்து முஸ்லிம்களின் பாதுகாவலர் என்பதையும் உறுதிப்படுத்த முயன்றுள்ளது. அதாவது, ஈரான் தனது கொள்கைகளில் சமரசம் செய்துகொள்வதில்லை, ஏனெனில் அந்தக் கொள்கைகளே அதன் முழுமையான கொள்கையின் சாரமாகவும் ஆன்மாவாகவும் உள்ளன.

• • •

## இராணுவ ஆக்கிரமிப்பு... தொடர்ச்சி...

### உயிர்நாடியான குளங்கள்

வடக்கு மாகாணத்தின் விவசாயம் பெரும்பாலும் பாரம்பரிய நீர்ப்பாசனக் குளங்களைச் சார்ந்தே இயங்கி வருகிறது. யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்கள் மழைநீரைச் சேமித்து வறட்சி காலங்களில் விவசாய நிலங்களுக்கு நீரை வழங்கும் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. எனினும், பல ஆண்டுகளாக போதிய பராமரிப்பு மேற்கொள்ளப்படாததால் இக்குளங்கள் இன்று பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றன.

பல குளங்களில் வண்டல் மண் தேங்கியிருப்பதால் அவற்றின் நீர்த்தேக்கத் திறன் கணிசமாகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக மழைக்காலங்களில் சேமிக்கப்படும் நீரின் அளவு குறைகிறது. மேலும், குளங்களுடன் இணைந்துள்ள கால்வாய்கள் மற்றும் நீர்வழங்கல் அமைப்புகள் சேதமடைந்துள்ளதால், சேமிக்கப்பட்ட நீர் விவசாய நிலங்களுக்கு முறையாகச் சென்றடைவதில்லை. சில இடங்களில் குளங்களின் அணைகள் பலவீனமடைந்துள்ளதால் மழைக் காலங்களில் நீர் வீணாக வெளியேறுகிறது.

### குளங்களும் நிலத்தடி நீரும்

குளங்கள் பராமரிக்கப்படாமையின் நேரடி தாக்கம் விவசாய உற்பத்தியிலேயே பிரதிபலிக்கிறது. போதுமான நீர் இல்லாத காரணத்தால் விவசாயிகள் நெல் மற்றும் பிற பயிர்களை முழு பரப்பளவில் செய்கை செய்ய முடியாமல் உள்ளனர். பலர் ஒரு போகப் பயிர்ச்செய்கையுடன் மட்டுமே தங்களை மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். வறட்சி காலங்களில் பயிர்கள் கருகிப் போவதாலும், விளைச்சல் குறைவதாலும் விவசாயிகள் பெரும் நட்டங்களைச் சந்திக்கின்றனர். இது அவர்களின் வருமானத்தையும் குடும்பங்களின் பொருளாதார நிலையையும் பாதிக்கிறது.

அத்துடன், குளங்களை பாதுகாக்கத் தவறுகின்றமையால் அது, நிலத்தடி நீர் வளங்களையும் பாதிக்கிறது. இயல்பாக குளங்களில் சேமிக்கப்படும் நீர் நிலத்திற்குள் ஊடுருவி கிணறுகள் மற்றும் பிற நீராதாரங்களைப் புதுப்பிக்கிறது. ஆனால் குளங்கள் வறண்டு போகும் நிலையில், நிலத்தடி நீர் மட்டமும் குறைகிறது. இதனால் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் தேவையான நீரைப் பெறுவதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, வடக்கின் விவசாய வளர்ச்சியையும் நீர்வளப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு குளங்களைப் புனரமைத்து, அவற்றின் பராமரிப்பை முறையாக மேற்கொள்வது அவசியமான தேவையாக உள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழர் தேசத்தின் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வெறும் விவசாயப் பிரச்சினைகள் மாத்திரமல்ல. இவை பொருண்மிய மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளாகும். அரசியல் உரிமையுடன், பொருளாதார உரிமையும் கிடைத்தல் அவசியமானது. இராணுவ ஆக்கிரமிப்பு நீங்க வேண்டியது அவசியமானது. இந்தச் சிக்கல்களுக்கு நிலையான தீர்வுகள் வழங்கப்படுமானால், வடக்கு-கிழக்கு தேசம் மீண்டும் பொருண்மியத்தில் சிறப்புப் பெற்று முக்கிய உணவு உற்பத்தி மையமாக வளர்ந்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்பது திண்ணம்.

• • •

## அரசின் வருமானத்தை ... தொடர்ச்சி...

வருவாய் அமைப்புகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல துறைகளின்கீழ் இந்த யோசனைகள் முன்வைக்கப்படலாம்.

இலங்கையின் பொது நிதிக் கொள்கைகள் குறித்து விசேட நிபுணத்துவம் பெற்ற எவராலும் சமர்ப்பிக்கப் படக்கூடிய இந்த யோசனைகள், அதன் சுருக்கம், செயல் படுத்தும் வழிமுறைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் தாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக PDF வடிவத்தில் தயாரிக் கப்பட வேண்டும்.

இந்த யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாக 2026 ஜூன் 16 ஆம் திகதி நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங் களை அனுப்பி வைக்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வருமான முகாமைத்துவக் குழு தெரிவித்துள்ளது.







## செயற்கை நுண்ணறிவால் ... தொடர்ச்சி...

மற்றும் இரத்தத்திலிருந்து மாதிரிகளை எடுத்து, ஆர். என்.ஏ-வை வரிசைப்படுத்தி, செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் முன்கணிப்பு வழிமுறைகளைப் பயன்படுத்தி, நோயாளியின் மரபணுவை கட்டியின் மரபணுவுடன் ஒப்பிட்டு தனித்துவமான பிறழ்வுகளைக் கண்டறிகின்றனர். அந்த இலக்குகள் கண்டறியப் பட்டவுடன், இந்தத் தடுப்பூசி பெப்டைடுகளை அறிமுகப்படுத்துகிறது. இவை, நோயெதிர்ப்பு மண்டலத்திற்குப் புரியவைத்து, வீரியம் மிக்க செல்களில் உள்ள அதே அடையாளங்காட்டிகளை அடையாளம் கண்டு, அவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொல்லும். அதே நேரத்தில் ஆரோக்கியமான திசுக்களைப் பாதிப்பின்றி விட்டுவிடுகின்றன.

“வீரியம் மிக்க கட்டி செல்களைக் கொல்ல நாங்கள் நோயெதிர்ப்பு மண்டலத்தைப் பயன்படுத்துகிறோம்,” என்று ஸ்க்வோர்ட்சோவா கூறினார். “இது மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களில் ஒன்றாகும்.”

இந்தத் திட்டம், நியோஆன்கோவாக் மற்றும் ஆன்கோபெப்ட் போன்ற உள்நாட்டுப் புற்றுநோய் தடுப்பூசிகள் உட்பட, தனிப்பயனாக்கப்பட்ட நோயெதிர்ப்பு சிகிச்சைகளில் ரஷ்யாவின் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாகும்.

முதல் இரண்டு பெருங்குடல் புற்றுநோயாளிகள் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு சிகிச்சையைத் தொடங்கினர், மேலும் அவர்கள் ஏற்கனவே ஐந்து ஊசிகளைப் பெற்றுள்ளனர். ஸ்க்வோர்ட்சோவாவின் கூற்றுப்படி, தடுப்பூசி இதுவரை பாதுகாப்பானதாகவும், நன்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் தோன்றுகிறது, மேலும் அவர்களின் கட்டிகளில் உள்ள ஜி இம்யூனோகுளோபுலின்களின் செறிவு 50 முதல் 100 மடங்கு அதிகரித்துள்ளது. நான்காவது ஊசிக்குப் பிறகு நிணநீர் முடிச்சுகளின் அளவில் குறைவு ஏற்பட்டதையும் மருத்துவர்கள் கவனித்துள்ளனர் என்று அவர் கூறினார்.

## தென்னிலங்கைத் ... தொடர்ச்சி...

நிதித்துவம் அர்த்தமுள்ளதா? இவ்வாறான கேள்விகளுக்கான பதில்களே எதிர்காலத்தில் அரசாங்கத்தின் உண்மையான அர்ப்பணிப்பை நிரூபிக்கும். மலையகத் தமிழர்களின் வரலாறு இலங்கையின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. அவர்கள் காடுகளை தோட்டங்களாக மாற்றினர். சாலைகளை அமைத்தனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தனர். ஆனால் அவர்களின் பங்களிப்புக்கு இணையான அங்கீகாரம் கிடைக்க பல தலைமுறைகள் காத்திருக்க வேண்டியிருந்தது. இன்று, அரசாங்கத்தின் ஒரு மூத்த அமைச்சர் அந்த வரலாற்று அநீதிகளை ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு முக்கிய திருப்புமுனையாக இருக்கலாம். ஆனால் உண்மையான மாற்றம் வரலாற்றை ஒப்புக்கொள்வதில் அல்ல; வரலாற்றால் உருவான சமத்துவமின்மைகளை நீக்குவதில்தான் உள்ளது.

அந்த வகையில், பார்க்கும்போது, மலையக மக்களின் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. ஆனால் அவர்கள் எதிர்நோக்கிய அநீதிகள் குறித்து தேசிய மட்டத்தில் வெளிப்படையான அங்கீகாரம் கிடைத்திருப்பது, நீண்ட நீதிப் பயணத்தின் புதிய அத்தியாயமாகக் கருதப்படலாம். உண்மையான மாற்றம் வார்த்தைகளால் அல்ல, செயற்பாடுகளால் அளவிடப்படும். குடியுரிமை பறிக்கப்பட்ட வரலாற்றை நினைவுகூர்வது மட்டும் போதாது. அதன் விளைவாக உருவான சமத்துவமின்மைகளை நீக்க வேண்டும். அந்த நாள் வரும்வரை, மலையக மக்களின் போராட்டம் தொடரும். ஆனால் இன்று ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. நீண்ட காலமாக மறைக்கப்பட்டிருந்த ஒரு உண்மை, நாட்டின் அரசியல் மேடையில் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அது வரலாற்றை மாற்றுமா? என்பது இனி அரசாங்கத்தின் செயல்பாடுகளிலேயே தங்கியுள்ளது.

• • •

## வலி வடக்கில் காணிகளை... தொடர்ச்சி...

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் குறித்த பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அந்த பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்தநிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வருகின்றனர்.

இத்தகைய சூழலில் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதென காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர்.

அதற்கமைய தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இன்று ஏழாவது வெள்ளிக்கிழமையும் காணி உரிமையாளர்களால் அமைதிவழியில் கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## தமிழீழ விடுதலைப்போராட்ட ... தொடர்ச்சி...

அடித்தளமாகக் கொண்டவை. சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைகளுக்கும், கல்வித் தரப்படுத்தல் போன்ற ஓரவஞ்சனையான சட்டங்களுக்கும் எதிராக எவ்வித சமரசமும் அற்ற உறுதியான நிலைப்பாட்டை அவர் கொண்டிருந்தார்.

மேடைப் பேச்சுகளிலும், அறிக்கைகளிலும் சுருங்கிவிடாமல், அடக்குமுறைக்கு எதிராகக் களத்தில் இறங்கிச் செயற்படும் துணிச்சல் அவரிடம் இருந்தது. எதிரியிடம் பிடிபட்டு, சித்திரவதைகளுக்கு உள்ளாகித் தனது தோழர்களையும், போராட்ட இரகசியங்களையும் காட்டிக்கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக, சயனைட் அருந்தித் தன்னுயிரை ஈகம் செய்தார். இலட்சியத்துக்காகத் தன்னுயிரையே மாய்க்கும் இந்தத் தியாகம், அவரது கொள்கைப் பற்றுக்குச் சான்றாகும்.தனது கல்வி, குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை என அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு, தமிழ் தேசிய மக்களின் நலனுக்கான தன்னை முழுமையாக அர்ப்பணித்த தூய சிந்தனை கொண்டவர்.

சிவகுமாரனின் காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இன்றைய தமிழ் இளைஞர்கள் வாழும் சூழல் முற்றிலும் மாறுபட்டது. முப்பதாண்டு கால ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரான இன்றைய காலகட்டத்தில், இளைஞர்கள் பல இருண்ட சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். போருக்குப் பின்னரான தமிழ் தேசிய அரசியல் களம் இளைஞர்களுக்குப் பெரிய அளவிலான நம்பிக்கையைத் தரவில்லை. தெளிவான அரசியல் வழிகாட்டல்கள் இன்மையால், பல இளைஞர்கள் அரசியலில் இருந்து அந்நியப்பட்டு நிற்கின்றனர்.

இதனை சாதகமாக பயன்படுத்தும் சிங்கள தேசம் முடிந்தவரையில் வடகிழக்கில் தமிழ் தேசிய உணர்வினை இளைஞர்கள் மத்தியில் சிதைக்கும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றனர்.இளைஞர்கள் மத்தியில் பல்வேறு வேண்டத்தகாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் தமிழ் தேசிய உணர்வுடன் சுயமாக செயற்பாடுகளை முன்னெடுக்கும் இளைஞர்கள் சட்டத்தின் துணைகொண்டு அடக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இன்றைய களம் வேறுபட்டிருந்தாலும், பொன். சிவகுமாரனின் வாழ்விலிருந்து இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அடிப்படைக் கொள்கைகள் பல உள்ளன. இன்று ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியமில்லை. ஆனால், சிவகுமாரனிடம் இருந்த அதே 'அர்ப்பணிப்பு உணர்வை' இன்றைய இளைஞர்கள் தமது கல்வியிலும், தொழில்நுட்ப வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும் செலுத்த வேண்டும்.

போதைப்பொருளுக்கும், சீர்கேடுகளுக்கும் அடிமையாகாமல், சமூகத்தின் மீதான பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். சிவகுமாரன் தனது சமூகத்தின் நலனுக்காகவே வாழ்ந்தார் என்பதை உணர வேண்டும்.

இன்றைய உலகளாவிய ஒழுங்கில், போராட்டங்கள் என்பவை இராஜதந்திரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் ஊடகவியல் சார்ந்தவையாக மாறியுள்ளன. இந்த அறிவார்ந்த தளங்களில் இளைஞர்கள் தங்களை ஆயத்தப் படுத்திக் கொள்ள வேண்டும். புலம்பெயர்ந்து சென்றாலும், அல்லது சொந்த மண்ணில் இருந்தாலும், தமது மொழி, இனம் மற்றும் நிலத்தின் மீதான பற்றைக் கைவிடாமல், அதன் மேம்பாட்டுக்காகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

தியாகி பொன்.சிவகுமாரன் தமிழ் தேசிய தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்காகத் தன்னையே விதையாகத் தூவிச் சென்றார். அவர் விட்டுச் சென்ற கொள்கைகளும், அர்ப்பணிப்பும் எந்தவொரு காலகட்டத்திற்கும் பொருந்துகின்ற ஒளியாகும்.சிவகுமாரனின் தியாகத்தை வெறும் நினைவேந்தல்களோடு சுருக்கிக் கொள்ளாமல், அவர் கனவுகண்ட சுயமரியாதையுள்ள, உரிமைகளுடன் கூடிய ஓர் அறிவுசார் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் இன்றைய இளைஞர்கள் முன்நிற்பதே அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

• • •

## காசாவில் 9,500க்கும்... தொடர்ச்சி...

பாலஸ்தீனியக் கைதிகளை விடுவிக்கவும், உடல்களைத் திருப்பிக் கொடுக்கவும் இஸ்ரேலைக் கட்டாயப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்காக ஒரு மரபணுத் தரவுத்தளத்தை நிறுவவும் உடனடி சர்வதேசத் தலையீட்டிற்கு அந்த அமைப்பு அழைப்பு விடுத்தது.

## தியாகி பொன் சிவகுமாரின் ... தொடர்ச்சி...

இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு குறிவைத்து அவரது வாகனத்தில் குண்டு பொருத்தினார். குண்டுவெடித்து சிதறி வாகனத்தின் மேல்பக்கம் எல்லாம் பெருந்தொலைவுக்கு சென்று விழுந்தது. ஆனால் துரையப்பா வருவதற்கு முன்னரே குண்டு வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலே ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் என்று கருதப்படுகிறது.

[தியாகி சிவகுமாரனின் முயற்சி தோல்வியடைந்ததால் 1975,யூலை,27,ல், அல்பிரட் துரையப்பாவை தலைவர் மேதகு சுட்டுக்கொன்றார் என்பது வரலாறு]

1974,யூன், 05 ல் யாழ்ப்பாணம் உரும்பிராயில் காவல் துறையி னரின் சுற்றி வளைப்பில் சிக்கியபோது, எதிரியிடம் பிடிபடக் கூடாது என்பதற்காக 24, வயது இளைஞனான சிவகுமார் சயனைட் அருந்தி தற்கொடை செய்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் முதன்முதலில் நஞ்சருந்து உயிர்நீத்த மாவீரர் பொன். சிவகுமாரின் 52, வது ஆண்டு நினைவு இன்றாகும்(05/06/2026) இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் 76, அகவையுடன் ஈழத்தில் அல்லது புலம்பெயர் தேசங்களில் ஒரு கல்விமானாக அல்லது அரசியல் பிரமுகராக கூட மனைவி பிள்ளை கள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்திருப்பார் அல்லவா.?

தனக்காக வாழாமல் தாய் நாடு விடுதலை பெற வேண்டும் என உயிர் தியாகம் செய்த இவரை நினைவுகூருவோம். தியாகத்தின் வடிவங்கள் ஈழப்போரில் எண்ணற்றவை அதில் தியாகி பொன் சிவகுமாரனின் தியாகமும் ஒன்றாகும்..!

தியாகி சிவகுமாரன் நினைவாக தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் 06, ம், திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச் சூழல் நாள் யூன்05 ஆம் நாள் என்பதால் அதற்கடுத்த நாள் சிவகுமாரன் நினைவாக மாணவர் எழுச்சி நாள் பிரகடனப்படுத்தப்பட்டது..

தமிழ் மக்களுக்கு எதிரான அரச அடக்கு முறை இன்றும் நீட்சியாக காணப்படுகின்றது. எமது உரிமைகளுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த சிவகுமாரனின் அர்ப்பணிப்பினை ஒட்டுமொத்த தமிழ் இனமும் நினைவுகூர்கின்றது.

அரச அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் அகிம்சை வழியிலான அணுகுமுறைகள் பயனற்றுப் போன சூழ்நிலையில் அரச அடக்குமுறையை எதிர்கொண்டாக வேண்டும் என்ற ஓர் நிர்ப்பந்தத்தில் மக்களின் மனநிலை நின்ற விடுதலைப்போராட்ட வீரனாகவே பொன். சிவகுமாரன் செயற்பட்டார்.

பொன் சிவகுமாரன் இனத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஓர் இளையவனாக மாணவர் விடுதலைப் போராட்டத்தின் முன்னேடியாக கட்சி அரசியல் விடயங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசிய விடுதலையை இலக்காகக் கொண்டு போராட்ட அமைப்புக்கள் நிறுவனமயப்படுத்தப்படாத காலகட்டத்தில் தனது தியாகத்தினை நிலைநாட்டியுள்ளார். எதிரியிடம் விடுதலைப் போராளிகள் உயிருடன் அகப்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் தன் இன்னுயிரை சயனைட் அருந்தி மாய்த்துள்ளார்.

விடுதலைப்போராட்டம் ஒடுக்குமுறைகளுக்கு எதிரானது என்ற நியாயபூர்வமான யதார்த்தத்தினை பொன். சிவகுமாரன் அவர்களது தியாகம் என்றும் பறைசாற்றுகின்றது. தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட கல்வி ரீதியிலான தரப்படுத்தல்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் என நீண்டு செல்லும் இனத்திற்கு எதிரான அநீதிகளிற்கு எதிராக பொன். சிவகுமாரன் போராடியுள்ளார். எமது போராட்டங்களின் முன்னோடியாக தியாகி சிவகுமாரனை என்றும் நினைவில் கொள்வோம்.

• • •

## அநுர அரசாங்கம் ஏமாற்றி... தொடர்ச்சி...

வாங்கப்பட்டுள்ளனர்.

மிகுதி 77 பேரும் வைத்தியசாலையில் எந்தவொரு சேவையையும் முன்னெடுக்காத அனுபவமற்றவர்களாகவே காணப் படுகின்றனர். இதைவிட மோசடியான விடயமாக 2019 ஆம் ஆண்டின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதற்கு முந்தைய காலத்தில் 180 நாள்கள் சேவையில் இருந்திருந்தால் அவர்கள் உள்வாங்கப்படுவர் என்று கூறப்படுகின்றது.

ஆனால் 2000 ஆம் ஆண்டின் பின் பிறந்த அதிகமானோர் அதில் உள்வாங்கப்பட்டுள்ளது எந்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் என்று தெரியவில்லை. இது இந்த அரசின் மோசடியாகவே இருக்கின்றது. எனவே எமக்கான நியமனம் கிடைக்கவேண்டும் அல்லது நாம் தொடர்ந்தும் போராடுவோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .







## தனிமையின் தவம்

அந்திக் கதிரவன் ஆழியில் மூழ்க,
அகிலமும் மெல்ல அமைதியில் சூழ,
எந்தன் நிழலும் என்னை விட்டு அகல,
ஏகாந்த வெளியில் பிறந்தது தனிமை!

கூட்ட நெரிசலில் தொலைந்தவென் முகத்தை,
கூட்டிக் கழித்துப் பார்த்திட வைத்தாய்.
ஆர்ப்பரிக்கும் உலகின் சப்தங்கள்
அடங்க,
ஆன்மாவின் இராகத்தை கேட்கவும்
செய்தாய்!

மௌனத்தின் மொழியில் உரையாடல்
நடாத்தி,
மனதின் கவலைக்கு மருந்தினைத்
தந்தாய்.
கடந்த காலத்தின் நினைவலைகள்
யாவும்,
கண் முன்னே நடக்கும் நாடகம்
கண்டேன்!

சுற்றமும் நட்பும் சுருங்கிய போதும்,
சுயத்தைத் தேட ஒரு நல்வழி தந்தாய்.
கண்ணீர்த் துளிகளும் கவிதை
யாகுதே,
காரிருள் அறையில் உன்மடி
சாய்கையிலே!

தனிமை என்பது சாபமும் அல்ல,
தனித்து வாழ்வது துயரமும் அல்ல,
தன்னை அறியும் தவக்காலம் அதுவே,
தரணியை வெல்லும் பல்திறன்
தருமே!

மு.சந்தியா
செல்வநாயகபுரம்

## கடதாசிகளில் மட்டும் பேசப்படும் "தமிழீழ மாணவர் எழுச்சி நாள்"

இதோ அதைப்பற்றிய சிறிய விளக்கம்.

பொன்னுத்துரை சிவகுமாரன் 1950-ஆம் ஆண்டு யாழ் உரும்பிராயில் பிறந்தார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் முன்னோடியும் மாணவர் தலைவருமாவார். தமிழ் மாணவர் பேரவையில் தீவிரமாக செயற்பட்டார். தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார்.

1974 ஜூன் 5-ஆம் நாள் கோப்பாயில் காவல்துறை சுற்றிவளைத்த போது, எதிரிகளிடம் அகப்படக்கூடாது என சயனைட் அருந்தி உயிர் நீத்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி தியாகம் செய்தவர் இவரே.

அவரது மரணம் இளைஞர்களிடம் பெரும் எழுச்சியை உண்டாக்கியது. பெண்கள் முதன்முதலாக சுடுகாட்டுக்கு வந்து அஞ்சலி செலுத்தியதும் இதன்போதே.
ஜூன் 6 ம் திகதியை “தமிழீழ மாணவர் எழுச்சி நாள்” ஆக கடைப்பிடித்து, தாய்மொழி உரிமைக்காக உயிர் நீத்த மாணவர்களை நினைவு கூரப்பட்டுவந்தது.

ஆனால் தற்பொழுது தமிழீழ வடக்கு கிழக்கில் இருக்கின்றவர்களுக்கும் எனது வயதை உடையவர்களுக்கும் ஏனைய சிறார்களுக்கும் இதைப்பற்றிய வரலாறு தெரியவில்லை. அத்தோடு இத்தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நினைவுகூரப்படுவதுமில்லை. எம் தாய் நாட்டின் வரலாறுகளை தேடிப் பார்க்கும் பொழுது மட்டுமே இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஆகவே முடியுமானவரை நம் தாய் நாட்டின் வரலாற்றுச் சம்பவங்களை தேடிஅறிந்து நினைவு கூருவோம்.

வரலாறுகள் மறைக்கப்படலாம் ஆனால் அது மறக்கப்படகூடாது. எம் முன்னைய சந்ததியை தலைவணங்கி, எதிர்கால சந்ததியை வழிநடத்துவோம்.

சு.திகழினி
கன்னியா



# தாயகமும் வாழ்வும்




மக்களின் கேள்வி




நினைவில் நின்ற தியாகங்கள்



போராட்டம் தொடர்கிறது